بِسۡمِ اللهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ نَحۡمَدُهٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِهِ الۡکَرِيۡمِ وَعَلٰی عَبۡدِهِ الۡمَسِيۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ

தொகுதி 7

இதழ் 38

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரி கமரி 1444 - ஸஃபர் 25 ★ தபூக் 22 - ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ★ 22 செப்டம்பர் 2022

## அல்லாஹ்வின் கட்டளை

وَالَّذِيۡنَ يُمَسِّکُوۡنَ بِالۡکِتٰبِ وَاَقَامُوا الصَّلٰوةَ ؕ اِنَّا لَا نُضِيۡعُ اَجۡرَ الۡمُصۡلِحِيۡنَ

**பொருள் :**
வேதத்தை உறுதியாகப் பற்றிக் கொண்டு தொழுகையினையும் நிறைவேற்றித் தங்களைச் சீர்திருத்திக் கொள்பவர்களின் நற்பலனை நாம் வீணாக்க மாட்டோம்.
(அல் அஃராஃப் : 171)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## இன்ஜீலின் போதனை ரத்தாகி விட்டது.
## திருக்குர்ஆனின் படி அமல் செய்யப்படுகின்றன.

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

திருக்குர்ஆனின் போதனை நுட்பமான அமைப்பை தன்னுள் கொண்டுள்ளது என்று நான் தற்போது தான் கூறியிருந்தேன். இதற்கெதிரில் இன்ஜீலின் போதனையைப் பாருங்கள்! ஒரு கன்னத்தில் அடிவாங்கிய பிறகு மறு கன்னத்தை காட்டவேண்டும் போன்ற போதனைகள். இவை எப்படிபட்ட ஆட்சேபனைக்குரிய போதனைகள் என்றால், அதனை திரையிட்டு மறைக்க முடியாது. மேலும், அதன் நாகரீக வடிவத்திற்கும் சாத்தியமில்லை. எந்த அளவுக்கு என்றால், மிகவும் மென்மையான இயல்பு படைத்த மற்றும் கண்ணியம் பொருந்திய பாதிரியால் கூட இந்த போதனையின்படி அமல் செய்ய முடியாது. ஒருவர், இன்ஜீலின் இந்தப் போதனைக்கு செயல் ரீதியான சான்று வழங்குவதற்காக ஒரு பாதிரி சாஹிபின் கன்னத்தில் அறைந்தால், அந்த பாதிரி மறு கன்னத்தை காட்டுவதற்கு பகரமாக காவல்துறையினரிடம் ஓடோடி செல்வார். மேலும் அந்த நபரை அவர் அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிடுவார்.

இதிலிருந்து தெளிவாக தெரிகின்றது. அதாவது, இன்ஜீலின் போதனை ரத்தாகி விட்டது. திருக்குர்ஆனின் படி அமல் செய்யப்படுகின்றன. பார்லி ரொட்டியின் துண்டுகளை (மட்டுமே) வைத்துள்ள ஓர் ஏழை மற்றும் வறிய வயதான பெண்மணி அந்த துண்டுகளிலிருந்து ஒரு பகுதியை கொடுத்து مِمَّا رَزَقۡنٰهُمۡ (அவர்களுக்கு வழங்கப்பட்டதிலிருந்து அவர்கள் செலவு செய்வார்கள்) என்ற போதனையின் கீழ் நுழைந்துவிட முடியும். ஆனால், ஒரு கன்னத்தில் அடிவாங்கிவிட்டு மறு கன்னத்தை காட்ட வேண்டும் என்ற இன்ஜீலின் போதனையில் தூய்மையிலும் தூய்மையான ஒரு பாதிரியால் கூட பங்கு பெற முடியாது.

இந்த அம்சத்தின் அடிப்படையில் இன்ஜீல்

## நபிமொழி

**உங்களில் ஒருவர் தொழுகைக்காகக் காத்திருக்கும் வரை அவர் தொழுகையிலேயே இருக்கின்றார்.**

(2119) : ஹஸ்ரத் அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் ஜமாஅத்தாக (பள்ளிவாயிலில்) தொழுகையை நிறைவேற்றினால் அவருக்கு வீட்டிலோ அல்லது கடைவீதியிலோ தனியாக தொழுவதை விட இருபதுக்கும் அதிகமான மடங்கு சிறந்ததாகும். ஏனெனில், அவர் வுளுச் செய்து, அதை அழகுறச் செய்துவிட்டு பின்னர், பள்ளிவாசலுக்கு வருகிறார். தொழுகையைத் தவிர வேறு எதுவும் அவரை (பள்ளி வாசலுக்கு) எழுந்து செல்ல வைக்கவில்லை. அவர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடிக்கும் ஒரு படித்தரம் (அந்தஸ்து) அவருக்கு உயர்த்தப்படுகிறது அல்லது அவரது ஒரு தவறு அவரைவிட்டு நீக்கப்படுகிறது. மேலும் உங்களில் ஒருவர் தொழக்கூடிய இடத்தில் அமர்ந்திருக்கும் வரை வானவர்கள் அவருக்காக கருணைக்கான பிரார்த்தனை செய்து கொண்டிருக்கின்றனர்.

இறைவா! இவர் மீது கருணை செய்வாயாக! இவருக்கு இரக்கம் காட்டுவாயாக! (என்று வானவர்கள் பிரார்த்தனை செய்கின்றார்கள்). அவரின் உளூ முறிந்துவிடாமலிருக்கும் வரை, (அல்லது) அங்கு அவர் பிறருக்குத் துன்பம் எதையும் செய்யாமலிருக்கும் வரை இந்த துஆ தொடர்ந்து கொண்டிருக்கும். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் தொழுகைக்காகக் காத்திருக்கும் வரை அவர் தொழுகையிலேயே இருக்கிறார்.
(புகாரி, தொகுதி 4 - பாடம் வியாபாரம், காதியான் பதிப்பு 2008)

## அநீதி இழைக்கப்படும் நேரத்தில் வெளிப்படையில் (மார்க்கத்தை) நிராகரிப்பதற்கு இஸ்லாம் அனுமதி வழங்கியுள்ளது என்று கிறித்தவ நூலாசிரியர்கள் எழுதுவது என்பது,கிறித்தவ பாதிரிகள் இஸ்லாத்தின் மீது செய்து வரும் அந்த அநீதிகளில் ஓர் அநீதி ஆகும்

ثُمَّ اِنَّ رَبَّكَ لِلَّذِيۡنَ هَاجَرُوۡا مِنۡۢ بَعۡدِ مَا فُتِنُوۡا ثُمَّ جٰهَدُوۡا وَصَبَرُوۡۤا ۙ اِنَّ رَبَّكَ مِنۡۢ بَعۡدِهَا لَغَفُوۡرٌ رَّحِيۡمٌ

(அந்நஹ்ல் : 111)

பொருள் : துன்பத்திற்காளாக்கப்பட்ட பின்னர், இடம் பெயர்ந்து சென்று அறப் போர் செய்து, உறுதியாக நிலைத்திருந்தவர்களுக்காகவே உம்முடைய இறைவன் இருக்கின்றான். நிச்சயமாக, உம்முடைய இறைவன் இதன் பின்னர் மிக்க மன்னிப்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (அந் நஹ்ல்:111)

இந்த வசனத்திற்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் விளக்கமளித்தவாறு கூறுகிறார்கள் :
எவர்கள் முன்னர் اِلَّا مَنۡ اُكۡرِهَ وَقَلۡبُهٗ مُطۡمَئِنٌّۢ بِالۡاِيۡمَانِ என்ற சொற்களின் மூலம் விதிவிலக்கானவர்களாக ஆக்கப்பட்டனரோ அவர்களுக்கு இந்த வசனத்தில் கட்டளை வழங்கப்பட்டுள்ளது. அநீதியை பொறுத்துக் கொள்ள முடியாமல், உள்ளத்தில் (ஈமான் கொண்டு) நிம்மதியடைந்திருந்தாலும் வெளிப்படையில் ஒருவர் மார்க்கப் புறக்கணிப்பை மேற்கொண்டுவிட்டால், அதுபோன்ற தவறை ஒருவர் செய்தால் அந்த நபருக்கான கட்டளை இவ்வாறாகும்.

(1) முதலாவதாக, எங்கு அவருக்கு மக்களுக்கு அஞ்சி மார்க்கப் புறக்கணிப்பை செய்ய நேரிட்டதோ அந்த இடத்தை விட்டு விலகிவிட வேண்டும்.

2) இரண்டாவதாக, அவர் மார்க்கத்தை பரப்புவதில் ஈடுபட்டுவிட வேண்டும்.

3) மூன்றாவதாக, அந்த முஜாஹிதாவை (கடும் போராட்டத்தை) நிறுத்திக் கொள்ளக் கூடாது. மாறாக, அதில் உறுதிப்பாட்டுடன் நிலைபெற்றிருக்க வேண்டும்.

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ராஷித் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் அருளுக்குரிய காலகட்டத்தில் ரோமானியப் பேரரசிற்கு எதிராக நடைபெற்ற போர்களைப் பற்றிய குறிப்புகள்**

**நீங்கள் உங்களது இறைவனுக்கு கட்டுப்படுங்கள், உங்களது அமீர்மார்களுக்கு எதிராக செயல்படாதீர்கள். உங்களது எண்ணத்தை இறைதிருப்திக்காக தூய்மையாக்கிக் கொள்ளுங்கள்**

**அல்லாஹ்வின் அருட்கொடைகள் எண்ணற்றவை ஆகும். அமல்கள் அதற்கு மாற்றாக இருக்க முடியாது. அல்லாஹ் உங்கள் மீது கருணை புரிந்துள்ளான். மேலும், உங்களை ஒரு கலிமாவின் கீழ் ஒன்றிணைத்துள்ளான். மேலும் உங்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்தியுள்ளான். உங்களுக்கு இஸ்லாத்தின் நேர்வழியை வழங்கியுள்ளான். மேலும் உங்களிடமிருந்து ஷய்த்தானை விலக்கியுள்ளான். இந்த விஷயங்களுக்காக நீங்கள் அல்லாஹ்வின் புகழை அதிகமாக எடுத்துரையுங்கள்.**

**அப்துல் கனீ சாஹிப் (ரப்வா) அவர்களின் மகன் நஸீர் அஹ்மது சாஹிப் ஷஹீதின் ஷஹாதத் சம்பவம், அன்னாரைப் பற்றிய நற்குறிப்புகள் மற்றும் ஜனாஸா காயிப் தொழுகை**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 19 ஆகஸ்ட் 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு ஸஹ்ர் மாதம் **19ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

பத்ர் போர் சஹாபா பற்றிய நற்குறிப்பில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுடைய காலத்தைப் பற்றிக் கூறப்பட்டுக் கொண்டிருந்தது. அன்னாருடைய காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றிக் கூறப்பட்டுக் கொண்டிருந்தது. அன்னாருடைய கிலாஃபத் காலக் கட்டத்தில் சிரியா மீது படையெடுத்தது பற்றி இன்று கூறப்படும். ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் கிளர்ச்சி செய்த முர்தத்களைத் தண்டித்து முடித்துவிட்ட பிறகு, அரேபியா உறுதியாக நிலைநின்ற பிறகு, அன்னார் அநீதியிழைத்து வந்த வெளிப்புற எதிரிகளில் ரோமானியர்களோடு போர் புரிவது பற்றி சிந்தித்தார்கள். அந்த மக்கள் அநீதி இழைக்கும் சமுதாயமாக இருந்தார்கள். முஸ்லிம்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், அன்னார்(ரலி) அதுவரை யாருக்கும் இதைப் பற்றித் தெரியப்படுத்தி-யிருக்கவில்லை. இன்றைய காலத்து சிரியா நாட்டின் அரசாங்கம் ரோமானியப் பேரரசு (அன்று) என்று அழைக்கப்பட்டு வந்தது. அங்கிருந்த அரசன் ரோமானிய சீஸர் என்று அழைக்கப்பட்டு வந்தான். அன்னார் இந்த சிந்தனையிலேயே ஆழ்ந்திருந்தார்கள். அதேவேளையில், ஹஸ்ரத் ஷுரஹ்பீல் பின் ஹஸனா (ரலி) அவர்கள் அன்னார் முன் ஆஜரானார்கள்.

மேலும், அன்னாருக்கு அருகில் அமர்ந்து கொண்டு பணிவுடன், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் கலீஃபா அவர்களே! தாங்கள் சிரியா மீது படையெடுப்பது பற்றி சிந்திக்கின்றீர்களா? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஆம்! எண்ணம் உள்ளது தான். ஆனால், இப்பொழுது இது பற்றி யாருக்கும் தெரியப்படுத்தவில்லை. நீர் எதற்காக இந்தக் கேள்வியைக் கேட்டீர்? என்று அன்னர் (ரலி) கூறினார்கள். அதற்கு, ஹஸ்ரத் ஷுரஹ்பீல் (ரலி) அவர்கள் பணிவுடன் கூறினார்கள்: ஆம்! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே நான் கனவுப் பார்த்தேன். தாங்கள் தங்களுடைய தோழர்களோடு நெருக்கடியான மலைப் பாதையில் செல்கிறீர்கள். பிறகு, தாங்கள் ஓர் உயர்வான மலை உச்சி மீது ஏறிவிட்டீர்கள். பிறகு, மக்களைப் பார்க்கின்றீர்கள். தங்களுடைய தோழர்களும் தங்களுடன் இருக்கின்றார்கள். பிறகு தாங்கள் அந்த மலை உச்சியில் இருந்து இறங்கி ஒரு மென்மையான, செழிப்பான நிலத்திற்கு வந்து வீட்டீர்கள். அதில் பயிர்கள், நீருற்றுகள், சிற்றூர்கள் மற்றும் கோட்டைகள் இருக்கின்றன.

இணைவைப்பாளர்கள் மீது தாக்குதல் நடத்திவிடுங்கள். உங்களுக்கு வெற்றி மற்றும் போர்ச் செல்வம் கிடைப்பதற்கு நான் பொறுப்பாவேன் என்று தாங்கள் முஸ்லிம்களிடம் கூறுகிறீர்கள். இதைக் கேட்ட முஸ்லிம்கள் தாக்குதல் தொடுத்துவிட்டார்கள். நானும் கொடியுடன் அந்தப் படையில் இணைந்திருந்தேன். நான் ஒரு சிற்றூர் பக்கம் சென்றேன். அதில் வசிக்கக் கூடிய மக்கள் என்னிடம் உயிருக்கு உத்திரவாதம் கேட்டார்கள். நான் அவர்களுக்கு உயிருக்கு உத்திரவாதம் அளித்துவிட்டேன். பிறகு, நான் தங்களிடம் திரும்பி வந்தபோது தாங்கள் ஒரு பெரும் கோட்டையைச் சென்றடைந்து விட்டீர்கள். தங்களுக்கு வெற்றி வழங்கப்பட்டது. அவர்கள் தங்களிடம் சமாதானத்திற்கான கோரிக்கை வைத்தார்கள். பிறகு, தங்களுக்காக ஓர் அரியணை வைக்கப்பட்டது. தாங்கள் அதில் அமர்ந்து கொண்டீர்கள். பிறகு, கூறக்கூடிய ஒருவர் தங்களிடம் கூறினார்:

அல்லாஹ் தங்களுக்கு வெற்றியை வழங்கி உள்ளான். மேலும், உதவி புரிந்துள்ளான். எனவே தாங்கள் தங்களுடைய இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள். மேலும், அவனுக்கு கட்டுப்பட்டுக் கொண்டே இருங்கள். பிறகு, அந்த நபர் இந்த வசனங்களை ஓதினார்.

اِذَا جَآءَ نَصْرُ اللّٰهِ وَالْفَتْحُ ○
وَرَاَيْتَ النَّاسَ يَدْخُلُوْنَ فِيْ دِيْنِ اللّٰهِ
اَفْوَاجًا ○ فَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ وَاسْتَغْفِرْهُ ؕ
اِنَّهٗ كَانَ تَوَّابًا ○

அதாவது, அல்லாஹ்வின் உதவியும், வெற்றியும் வரும்போது மக்கள் கூட்டம் கூட்டமாக அல்லாஹ்வின் மார்க்கத்தில் நுழைவதை நீர் காண்பீர். எனவே, உமது இறைவனின் தூய்மையை எடுத்துரைத்து அவனைப் புகழ்வீராக. மேலும், அவனிடம் பாவமன்னிப்பு கோருவீராக. நிச்சயமாக அவன் பாவமன்னிப்பை அதிகம் ஏற்றுக் கொள்ளக்கூடியவன் ஆவான்.

ஹஸ்ரத் ஷுரஹ்பீல் (ரலி) கூறுகிறார்கள்: இதன் பிறகு, நான் கண்

விழித்துவிட்டேன். இது பெரிய கனவாக இருந்தது.

இந்தக் கனவைக் கேட்ட ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

உமது கண்கள் குளிர்ச்சி அடையட்டுமாக! நீர் நல்ல கனவைப் பார்த்துள்ளீர். மேலும் நல்லதே நடக்கும். இன்ஷாஅல்லாஹ். அடுத்து ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நீர் இந்தக் கனவில், வெற்றிக்கான நற்செய்தி மற்றும் என்னுடைய மரணத்தைப் பற்றிய தகவலை தெரியப்படுத்தியுள்ளீர். இந்த விஷயத்தைக் கூறும்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது.

அன்னார் (ரலி) கூறினார்கள்: நாங்கள் கற்கள் நிறைந்த பகுதியில் நடந்து சென்று மலை உச்சி மீது ஏறியது மற்றும் அங்கிருந்து கீழே மக்களை எட்டிப் பார்த்ததன் பொருள்: அந்தப் படை விஷயத்தில் நமக்கு சிரமத்தை எதிர்கொள்ள நேரிடும். அந்தப் படை மக்களும் கஷ்டப்பட வேண்டியது வரும். அதன் பிறகு, நமக்கு வெற்றியும், உறுதிப்பாடும் கிடைத்துவிடும் என்பதாகும்.

நாம் மலை உச்சியில் இருந்து இறங்கி செழிப்பான நிலத்திற்குச் சென்றதன் விளக்கம்: மேலும், அதில் மென்மையான, செழிப்பான பயிர்கள், நீருற்றுகள், சிற்றூர்கள் மற்றும் கோட்டைகள் இருந்ததன் விளக்கம்: இது நாம் முன்னரை விட அதிகம் எளிதைப் பெறுவோம் என்பதையும், நமக்கு முன்பை விட அதிகம் செழிப்பான நிலம் கிடைக்கும் என்பதையும் குறிக்கிறது.

இணைவைப்பாளர்கள் மீது தாக்குதல் தொடுங்கள். உங்களுக்கு வெற்றி மற்றும் போர் செல்வம் கிடைப்பதற்கு நான் பொறுப்பாவேன் என்று முஸ்லிம்களுக்கு கட்டளை இடுவது என்பது, நான் முஸ்லிம்களை இணைவைப்பாளர்களின் நாடுகள் பக்கம் அனுப்பி வைப்பது மற்றும் அவர்களுக்கு ஜிஹாதிற்காக எழுச்சியூட்டுவதைக் குறிக்கிறது.

உம்மிடம் இருந்த கொடி, அதை எடுத்துக் கொண்டு அந்த சிற்றூர்களில் ஒரு சிற்றூரை நோக்கி நீர் சென்றது, அதில் நுழைந்தது, அங்கிருந்த மக்கள் உம்மிடம் உயிருக்கு உத்திரவாதம் கேட்டது, நீர் அவர்களுக்கு உயிருக்கு உத்திரவாதம் அளித்தது, ஆகியவற்றின் பொருள்: நீர் அந்தப் பகுதிகளை வெற்றி காணக்கூடிய தலைவர்களில் ஒருவராக இருப்பீர். அல்லாஹ் உமது கைகளால் வெற்றியை வழங்குவான் என்பதாகும்.

அல்லாஹ் நம்மை வெற்றி காண வைத்த அந்தக் கோட்டை என்பது அல்லாஹ் எனக்காக வெற்றி பெறச் செய்யும் பகுதிகளைக் குறிக்கும். நான் அமர்ந்திருப்பதாக நீர் கண்ட அரியணையின் விளக்கம், அல்லாஹ் எனக்கு கண்ணியத்தையும், உயர்வையும் அளிப்பான். இணைவைப்பாளர்களை இழிவும், மேலும் தாழ்வும் அடையச் செய்வான் என்பதாகும்.

எனக்கு நற்செயல்கள் செய்யுமாறும், அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுமாறும் கட்டளையிட்ட மேலும் எனக்கு முன் சூரா அந்நஸர் ஓதிய அந்த நபரைப் பொருத்தவரை, இவ்வாறு அவர் எனக்கு என்னுடைய மரணத்தைப் பற்றி தெரியப்படுத்தியுள்ளார்.

இதே அதிகாரம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கியபோது, இந்த சூராவில் அன்னாருடைய வஃபாத் பற்றிய தகவல் கொடுக்கப்படுகிறது என்பது அன்னாருக்கு தெரிந்திருந்தது.

ஆக, ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் அந்தக் கனவுக்கு இவ்வாறு விளக்கம் அளித்தார்கள்:

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் சிரியாவை வெற்றி காண்பதற்காக படையை ஆயத்தப்படுத்த எண்ணியபோது, ஆலோசனை பெறுவதற்காக, ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் அலீ (ரலி), ஹஸ்ரத் அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப்,ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் ஸுபைர் (ரலி), ஹஸ்ரத் சஃது பின் அபீ வகாஸ் (ரலி), ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி), பத்ர் போர் மக்களில் பெரும் முஹாஜிர்கள், அன்சார்கள் மற்றும் இதர சஹாபா பெருமக்களை அன்னார் (ரலி) வரவழைத்தார்கள். இந்த சஹாபா பெருமக்கள் அன்னார் முன் ஆஜரானபோது, அன்னார் (ரலி) கூறினார்கள்:

அல்லாஹ்வின் அருட்கள் எண்ணற்றவை. நற்செயல்கள் அவற்றிற்கு ஈடாக முடியாது. அல்லாஹ் உங்கள் மீது பேரருள் புரிந்தான். ஒரு கலிமாவில் உங்களை ஒன்றிணைத்தான். உங்கள் மத்தியில் சமாதானம் செய்து வைத்தான். உங்களுக்கு இஸ்லாம் எனும் நேர்வழியை வழங்கினான். ஷைத்தானை உங்களிடமிருந்து விலக்கினான். இந்த விஷயங்களுக்காக அல்லாஹ்வை அதிகமாகப் புகழுங்கள்.

இப்பொழுது ஷைத்தானுக்கு உங்களிடம் நீங்கள் இணைவைப்பில் மூழ்குவீர்கள் என்றோ, இறைவனைத் தவிர வேறு எவரையும் வணக்கத்திற்குரியவராக ஆக்கிக் கொள்வீர்கள் என்றோ நம்பிக்கை இல்லை. இன்று அரேபியர்கள் ஒரே சமுதாயமாக இருக்கிறார்கள். அவர்கள் ஒரே தாய், தந்தையின் பிள்ளைகளாக இருக்கிறார்கள். நான் அவர்களை ரோமானியர்களோடு போர் புரிய சிரியாவுக்கு அனுப்பி வைக்க விரும்புகிறேன். அவர்களில் கொல்லப்பட்டவர் ஷஹீத் ஆவார். அல்லாஹ் நற்செயல் செய்பவர்களுக்காக சிறந்த வெகுமதியைத் தயார் செய்து வைத்துள்ளான்.

அவர்களில் உயிருடன் இருப்பவர் இஸ்லாம் மார்க்கத்தை தற்காத்தவாறு உயிருடன் இருப்பார். அல்லாஹ்விடத்தில் போர் வீரர்களுக்கான வெகுமதி மற்றும் நற்கூலிக்கு உரியவராக இருப்பார். இது எனது கருத்தாகும். இப்பொழுது உங்களில் ஒவ்வொருவரும் தமது கருத்துக்கு ஏற்ப ஆலோசனை வழங்குங்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அவர்களிடம் ஆலோசனை கேட்டார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். அன்னார் (ரலி) கூறினார்கள்: தன்னுடைய அடியார்களில் தான் விரும்புபவருக்கு நன்மையும், அருளையும் வழங்கும் அந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நன்மையின் எந்த விஷயத்தில் நாங்கள் தங்களை முந்த விரும்பியிருந்தாலும் சரி, தாங்கள் அதில் எப்பொழுதும் எங்களை விட முந்திச் சென்றுள்ளீர்கள். இது அல்லாஹ்வின் சிறப்பான அருளும், கருணையும் ஆகும். அவன் தான் நாடுபவருக்கு இதை வழங்குகின்றான்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! தாங்கள் தற்போது எடுத்துரைத்த இந்த நோக்கத்திற்காகவே நான் தங்களை சந்திக்க விரும்பினேன். ஆனால், அல்லாஹ்வின் விருப்பம் என்னவாக இருந்தது என்றால், என்னால் தங்களிடம் அந்த விஷயத்தைப் பேச முடியவில்லை. அதற்குள் தாங்களே இதைப் பற்றிக் கூறிவிட்டீர்கள். நிச்சயமாக, தங்களுடைய கருத்து சரியானதே! அல்லாஹ் தங்களுக்க சரியான கருத்தின் புரிதலை வழங்கியுள்ளான்.

பின்னர், ஹஸ்ரத் அப்துர் ரஹ்மானான் பின் அஃப் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி), ஹஸ்ரத்

தல்ஹா (ரலி), ஹஸ்ரத் சஃது (ரலி), ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி), ஹஸ்ரத் சயீத் பின் ஸைத் (ரலி), ஹஸ்ரத் அலீ (ரலி), மற்றும் சபையில் ஆஜராகி இருந்த அனைத்து முஹாஜிர்களும், அன்சார் சஹாபிகளும் அன்னாருடைய ஆலோசனையை வழிமொழிந்தவாறு பணிவுடன் கூறினார்கள்:

நாங்கள் தங்களுடைய பேச்சையும் கேட்போம். கட்டுப்படவும் செய்வோம். நாங்கள் தங்களுடைய கட்டளைக்கு மாறு செய்யமாட்டோம். தங்களுடைய அறிவிப்பிற்கு செவிசாய்ப்போம்.

அடுத்து, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீண்டும் மக்களுடன் உரையாடுவதற்காக எழுந்து நின்றார்கள். அன்னார் அல்லாஹ்வுக்கே உரித்தான அவனது தூய்மையையும், புகழையும் எடுத்துரைத்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலாமும், தரூதும் ஓதினார்கள். பின்னர், கூறினார்கள்: மக்களே! சந்தேகமின்றி அல்லாஹ் உங்களுக்கு இஸ்லாம் எனும் அருட்கொடையை வழங்கி உங்கள் மீது பேரருள் புரிந்திருக்கிறான். போரைக் கொண்டு உங்களை கண்ணியப்படுத்தியிருக்கின்றான். இஸ்லாம் மார்க்கம் மூலமாக உங்களுக்கு இதர மார்க்கங்களின் மீது மேன்மையை வழங்கியுள்ளான். எனவே, அல்லாஹ்வின் அடியார்களே! சிரியா நாட்டில் ரோமானியர்களுடன் போர் புரிவதற்கு ஆயத்தமாகி விடுங்கள்.

இப்பொழுது நான் உங்களுடைய அமீர்மார்களை நியமினம் செய்யப் போகிறேன். அவர்களை உங்களது தளபதிகளாக ஆக்கப் போகின்றேன். நீங்கள் உங்களுடைய இறைவனுக்குக் கட்டுப்படுங்கள். உங்களுடைய அமீர்மார்களுக்கு மாறு செய்யாதீர்கள். இறை திருப்தியைப் பெறவேண்டும் என்பதற்காக உங்களுடைய எண்ணத்தைக் கலப்பற்றதாக ஆக்கிக் கொள்ளுங்கள். வாழ்வு முறையையும், நடத்தையையும் சிறந்ததிலும் சிறந்ததாக ஆக்குங்கள். உணவு முறையை நல்லதாக வையுங்கள். அல்லாஹ் தீமைகளில் இருந்து தவிர்ந்திருப்பவர்கள் மற்றும் பேருதவி புரிபவர்களுடன் இருக்கின்றான்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள். அன்னார்(ரலி) மக்கள் மத்தியில் இவ்வாறு அறிவித்து விட்டார்கள்: மக்களே! உங்களுடைய ரோமானிய எதிரியுடன் போர் புரிவதற்காக சிரியாவை நோக்கிப் புறப்படுங்கள். முஸ்லிம்களின் அமீராக ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்கள் இருப்பார்கள்.

சிரியா நாட்டின் வெற்றிகளின் தொடருக்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எல்லாரையும் விட முதலில் ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்களை அனுப்பி வைத்தார்கள். ஓர் அறிவிப்பிற்கு ஏற்ப ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஜ் செய்துவிட்டு மதீனாவுக்குத் திரும்பி வந்த பிறகு, ஹிஜ்ரி 13 ஆம் ஆண்டு அன்னார் ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்களை ஒரு படையுடன் சிரியாவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். ஆனால், சில மக்கள் கூறுகின்றனர்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்களை ஈராக்கை நோக்கி அனுப்பி வைத்த அந்தநேரத்திலேயே ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்களை சிரியாவுக்கு அனுப்பி வைத்தார்கள்.

ஆக, சிரியா வெற்றிக்காகப் பறக்க விடப்பட்ட முதல் கொடி ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்களுடையதாகும். இது தவிர, ஓர் அறிவிப்பில் இருந்து தெரியவருவதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முர்தத்களுக்கு எதிராகப் பதினோறு படைகளைத் தயார் செய்து அனுப்பி வைத்தபோது, அப்பொழுதே அன்னார் ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்களுக்கு சிரியாவின் எல்லைப் புறங்களை பாதுகாப்பதற்காக தைமா செல்வதற்கு ஆணையிட்டார்கள். மேலும், இவ்வாறு வழிகாட்டலும் வழங்கியிருந்தார்கள் :

உங்கள் இடத்தை விட்டு நகராதீர்கள். அக்கம் பக்கத்து மக்களை உங்களுடன் இணைந்து கொள்வதற்கு அழைப்பு விடுங்கள். முர்தத் ஆகாத மக்களை மட்டுமே படையில் சேர்த்துக் கொள்ள வேண்டும். உங்களுடன் போரிடுபவர்களுடன் மட்டுமே நீங்கள் போரிட வேண்டும். என்னிடமிருந்து வேறோர் கட்டளை வரும் வரை இவ்வாறே செய்து வாருங்கள்.

தைமா என்பதும் சிரியா மற்றும் மதீனாவுக்கு இடைப்பட்ட ஒரு பிரபலமான நகரமாகும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ரோமானியர்களுக்கு எதிராகப் போர் புரிவதற்காக மதீனத்து மக்கள் மட்டுமின்றி, மற்ற பகுதிகளின் முஸ்லிம்களையும் ஆயத்தப்படுத்த ஆரம்பித்தார்கள். போரில் கலந்து கொள்ளுமாறு அவர்களுக்கு எழுச்சியூட்டினார்கள். ஆக, அன்னார் ஏமன் வாசிகளை நோக்கியும், ஒரு கடிதம் எழுதினார்கள். அதன் வரிகள் இவ்வாறு உள்ளன:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் கலீஃபாவின் தரப்பிலிருந்து ஏமன் வாசிகளில் நம்பிக்கை கொண்டவர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஒவ்வொருவருக்கும் எழுதப்படுகிறது. எவர்களிடம் இது வாசிக்கப்படுகிறதோ அவர்களுக்கு சாந்தி உண்டாகுவதாக! நான் உங்கள் முன் அல்லாஹ்வைப் புகழ்கிறேன். அவனை அன்றி, வணக்கத்திற்குரியவர் எவரும் இல்லை. அல்லாஹ் முஸ்லிம்கள் மீது ஜிஹாதைக் கடமையாக்கியுள்ளான். மேலும், அவர்கள் அதற்காக சிறு ஆயுதத்தையோ அல்லது முழு ஆயுதத்தையோ தயார் செய்து கொண்டு புறப்படவேண்டும் என்று அவர்களுக்கு கட்டளையிட்டுள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான்:

وَجَاهِدُوا بِأَمْوَالِكُمْ وَأَنْفُسِكُمْ فِي سَبِيلِ اللّٰهِ

பொருள்: அல்லாஹ்வின் வழியில், உங்களது செல்வங்கள் மற்றும் உயிர்களைக் கொண்டு ஜிஹாத் செய்யுங்கள். ஆக, ஜிஹாத் கட்டாயக் கடமையாகும். அல்லாஹ்விடம் இதற்கான மாபெரும் நற்கூலி உள்ளது. நாம் முஸ்லிம்களுக்கு சிரியாவில் ரோமானியர்களுடன் போரிடுமாறு கட்டளை இட்டுள்ளோம். இவர்களின் எண்ணங்கள் நல்லவையாகவும், அந்தஸ்து உயர்வானதாகவும் உள்ளது. எனவே, அல்லாஹ்வின் அடியார்களே! உங்கள் இறைவனின் கடமை, தூதரின் நடைமுறையின் பக்கம் விரைந்து செல்லுங்கள். மேலும் இந்த இரண்டு நன்மைகளில் ஒரு நன்மையின் பால் விரைந்து செல்லுங்கள். அதாவது ஒன்று, உயிர்த் தியாகம் அல்லது வெற்றியும் போர்செல்வமும்.

அல்லாஹ் தனது அடியாருடைய நற்செயலற்ற விஷயத்தில் திருப்தியடைவதில்லை. அவர் எதிரிகளுடன் போரைக் கைவிடுவதிலும் திருப்தியடைவதில்லை. எதுவரை என்றால், அவர்கள் உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும். திருக்குர்ஆனின் கட்டளையை ஏற்றுக் கொள்ளவேண்டும்.

அல்லாஹ் உங்களது மார்க்கத்தை பாதுகாப்பானாக! உங்களது உள்ளங்களுக்கு நேர்வழியை வழங்குவானாக! உங்களது செயல்களைத் தூய்மையாக்குவானாக! உங்களுக்கு பொறுமை காக்கக்கூடிய முஜாஹித்களுக்கு வழங்குவது போன்ற வெகுமதியை வழங்குவானாக!

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்தக் கடிதத்தை ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களின் கையில் கொடுத்தனுப்பினார்கள். ஹஸ்ரத் அனஸ்

(ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஏமன் சென்றடைந்தேன். ஒவ்வொரு பகுதி மற்றும் ஒவ்வொரு கோத்திரத்திடமிருந்து துவங்கினேன். நான் அவர்களுக்கு முன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கடிதத்தை வாசித்து வந்தேன். நான் கடிதத்தைப் படித்து முடித்த பின், எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் எவனும் இல்லை என்றும், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள் என்றும் நான் சாட்சி பகர்கிறேன் எனக் கூறுவேன்.

நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கலீஃபா மற்றும் முஸ்லிம்களின் தூதுவர் ஆவேன். கவனமாகக் கேளுங்கள். நான் முஸ்லிம்களை ஒரு படையின் வடிவில் ஒன்றிணைந்த நிலையில் விட்டுவந்துள்ளேன். அவர்கள் தமது எதிரியை நோக்கிப் புறப்படுவதை விட்டும், அவர்களை உங்களுடைய அதாவது, நீங்கள் மதீனாவுக்கு வருவதற்கான காத்திருப்பு தான் தடுத்துள்ளது. எனவே, நீங்கள் விரைவாக உங்களது சகோதரர்களை நோக்கிப் புறப்படுங்கள். முஸ்லிம்களே! அல்லாஹ் உங்கள் மீது கருணை புரிவானாக!

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் மதீனாவுக்குத் திரும்பி வந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு மக்களின் வருகை பற்றிய நற்செய்தியைக் கூறியவாறு பணிவுடன் கூறினார்கள்: ஏமனின் வீரமிக்கவர்கள், துணிச்சல் வாய்ந்தவர்கள், குதிரை வீரர்கள், கலைந்த தலையுடனும் தூசி படிந்த நிலையிலும் தங்களிடம் வந்தடைய இருக்கின்றார்கள். அவர்கள் தமது செல்வங்கள், பொருட்கள் மற்றும் மனைவி மக்களுடன் புறப்பட்டுவிட்டார்கள்.

மறுபுறம், ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்கள் தைமா சென்றடைந்து, அங்கேயே தங்கிவிட்டார்கள். அக்கம் பக்கத்தின் பல கூட்டங்கள் அவர்களுடன் வந்து இணைந்து கொண்டன. ரோமானியர்ளுக்கு முஸ்லிம்களின் இந்த மாபெரும் படையைப் பற்றித் தெரிய வந்தது. அவர்கள் தமது தாக்கத்திற்குக் கீழ் இருந்த அரேபியர்களிடம் சிரியா போருக்காகப் படைகளைக் கோரினார்கள்.

ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ரோமானியர்களின் இந்த ஆயத்தத்தைப் பற்றி எழுதினார்கள்: நீங்கள் முன்னேறிச் செல்லுங்கள். சற்றும் பதற்றம் அடையாதீர்கள். அல்லாஹ்விடம் உதவி கோருங்கள். இதனால், ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்கள் ரோமானியர்களை நோக்கிச் சென்றார்கள். ஆனால், அன்னார் அவர்களுக்கு அருகில் சென்றபோது, அவர்கள் இங்குமங்குமாக சிதறிப்போனார்கள். அவர்கள் தமது இடத்தை விட்டு விட்டார்கள். ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்கள் அந்த இடத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அன்னாரிடம் ஒன்று கூடியிருந்த பெரும்பாலான மக்கள் முஸ்லிம் ஆகிவிட்டார்கள். ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அதைப் பற்றி தெரியப்படுத்தினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதினார்கள்: நீங்கள் முன்னேறிச் செல்லுங்கள். ஆனால், பின்னாலிருந்து தாக்குதல் தொடுப்பதற்கு எதிரிக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் அளவுக்கு முன்னால் செல்லாதீர்கள். ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்கள் அந்த மக்களை அழைத்துக் கொண்டு புறப்பட்டார்கள். எதுவரை என்றால், ஓரிடத்தில் முகாமிட்டார்கள். அங்கு அவர்களை எதிர்கொள்ள பாஹான் என்ற ஒரு ரோமானிய பாதிரி வந்தான். ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்கள் அவனைத் தோற்கடித்தார்கள். அவனது படைகளில் பலரைக் கொன்றார்கள். பாஹான் தப்பியோடி தமாஸ்கஸ் பக்கம் தஞ்சம் அடைந்தான். ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்கள் அதைப் பற்றி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குத் தகவல் தெரிவித்து மேற்கொண்டு உதவிப்படையைக் கோரினார்கள்.

அப்பொழுது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சிரியா போருக்காக ஏமனிலிருந்து ஆரம்ப கட்டமாகப் புறப்பட்டு வந்திருந்த மக்கள் இருந்தனர். அவர்கள் மட்டுமின்றி, மக்கா மற்றும் ஏமனுக்கு இடைப்பட்ட மக்களும் வந்திருந்தார்கள். அந்த மக்களில் ஹஸ்ரத் ஸுல் கிலாஃ (ரலி) அவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களும் முர்தத்களுக்கு எதிரான போரில் வெற்றி பெற்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் திரும்பி வந்திருந்தார்கள்.

அவர்களுடன் சில பகுதிகளில் இன்னும் சில மக்களும் இருந்தார்கள். அவர்கள் அனைவரைக் குறித்தும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உண்மையான தலைவர்களுக்கு இவ்வாறு எழுதினார்கள்: எவர்கள் மாற விரும்புகிறார்களோ, அவர்களை மாற்றிவிடுங்கள்.

ஆக, அனைவரும் மாற விரும்பினார்கள். ஆக, அவர்கள் அனைவரையும் மாற்றி ஒரு புதிய படை தயார் செய்யப்பட்டது.

எனவே, அந்தப் படைக்கு ஜைஷுல் பதால் என்று பெயர் வந்தது. இந்தப் படைகள் ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்களிடம் சென்றடைந்தன. அதற்குப் பிறகும் கூட, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மக்களுக்கு சிரியா போருக்காக எழுச்சியூட்டி வந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வலீத் பின் உக்பா (ரலி) அவர்களுக்கு, ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்களிடம் சிரியா சென்றடையுமாறு வழிகாட்டல் வழங்கினார்கள்.

வலீத் அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்களை சென்றடைந்தபோது, அவர்கள் காலித் (ரலி) அவர்களிடம் மதீனத்து மக்கள் தங்களுடைய சகோதரர்களுக்கு உதவிப்புரிய துடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் படைகளை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடு செய்தார்கள் என்று கூறினார்கள்.

இதைக் கேட்டு ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்களின் மகிழ்ச்சிக்கு எல்லையே இருக்கவில்லை. அவர்கள் ரோமானியர்களை வெற்றிக் காண்பதற்கான பெருமிதம் தமது பங்கில் வரவேண்டும் என்ற எண்ணத்தில், ஹஸ்ரத் வலீத் பின் உக்பா (ரலி) அவர்களை உடன் அழைத்துக் கொண்டு ரோமானியர்களின் மாபெரும் படை மீது தாக்குதல் நடத்த நினைத்தார்கள். அதை அந்த மக்களின் படைத் தளபதி பாஹான் வழி நடத்திக் கொண்டிருந்தான்.

ஆக, ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்கள் ரோமானியப் படை மீது தாக்குதல் தொடுத்த சமயத்தில், எதிரி பின்னால் இருந்து தாக்குதல் தொடுப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் அளவுக்கு முன்னோக்கிச் செல்லாதீர்கள் என்ற ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வழிகாட்டலை கருத்திற் கொள்ளாமல் விட்டுவிட்டார்கள். எவ்வாறு இருப்பினும், அவர்கள் தமது பின்பக்கத்தைப் பாதுகாப்பதை விட்டும் முற்றிலும் கவனமற்றவர்களாக ஆகிவிட்டார்கள். மற்ற தலைவர்கள் வந்தடைவதற்கு முன்னரே ரோமானியர்களுடன் போர் புரிய ஆரம்பித்துவிட்டார்கள்.

பாஹான் தனது தோழர்களுடன் அவர்களுக்கு முன்னால் இருந்து விலகி தமாஸ்கஸ் பக்கம் சென்றுவிட்டான். பாஹான் பின்வாங்கியது உண்மையில்,

ஒரு சூழ்ச்சியாகும். அவன் முஸ்லிம்களை சுற்றி வளைத்து பின்புறமிருந்து அவர்கள் மீது தாக்குதல் தொடுக்க அவன் எண்ணினான். இந்த ஆபத்தைப் பற்றி, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாருக்கு முன்னரே எச்சரிக்கை விடுத்திருந்தார்கள். ஆனால், வெற்றிக்கான உணர்ச்சியானது, ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்களை காலத்தின் கலீஃபாவின் இந்த எச்சரிக்கையை விட்டும் கவனமற்றவர் ஆக்கி, முன்னோக்கி செல்லத் தூண்டியது. ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்கள் எதிரியின் படையினுள் நுழைந்து முன்னேறிக் கொண்டே சென்றார்கள்.

அப்பொழுது அவர்களுடன் ஹஸ்ரத் வலீத் பின் உக்பா (ரலி) மட்டுமின்றி. ஹஸ்ரத் ஸுல்கிலா (ரலி) அவர்களும், ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களும் கூட இருந்தார்கள். அங்கு ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்களை பாஹானுடைய படையின் காவலாளிகள் ஒன்றிணைந்து சூழ்ந்து கொண்டார்கள். அவர்களை வழிமறித்து விட்டார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் இதைப் பற்றித் அறியக் கூட இல்லை. இதன் பிறகு, பாஹான் முன்னோக்கிச் சென்றான். மேலும், ஓரிடத்தில் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் மகன் சயீத் சில மக்களுடன் சேர்ந்து தண்ணீர் தேடி அலைவதைக் கண்டு, அவர்கள் அனைவரையும் அவன் கொன்றுவிட்டான்.

ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்களுக்கு அந்தத் தகவல் கிடைத்தது. அதாவது, அவர்களின் மகனும், தோழர்களும் கொல்லப்பட்டது பற்றி, ஷஹீத் ஆனது பற்றி தகவல் கிடைத்தது. ஆக, சவாரிகளின் ஒரு சிறு படைக்குழுவோடு அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்கள். எதிர்த்துப் போர் புரிவதற்கு பதிலாக அங்கிருந்து விலகிச் சென்றுவிட்டார்கள். அவர்கள் சென்ற பிறகு, இன்னும் பல தோழர்களும் குதிரைகள் மற்றும் ஒட்டகங்கள் மீது பயணித்து தமது படையை விட்டுத் தனித்துச் சென்றுவிட்டார்கள். காலித் தோல்வி அடைந்து ஸுல் மர்வஹ் வரை வந்தடைந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் தமது இடத்தை விட்டு நகரவில்லை. மாறாக, முஸ்லிம்களுக்கு உதவி செய்து வந்தார்கள்.

ஸுல் மர்வஹ் மக்கா மற்றும் மதீனாவுக்கு இடையில் சுமார் 96 மைல் தொலைவில் உள்ள ஓர் இடமாகும்.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்கள் பாஹான் மற்றும் அவனது படைகளை ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களை பின் தொடர்வதிலிருந்து தடுத்து நிறுத்தினார்கள். இதைப் பற்றிய தகவல் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு கிடைத்த போது, அன்னார் ஹஸ்ரத் காலித் (ரலி) மீது கோபத்தை வெளிப்படுத்தினார்கள். மேலும், மதீனாவுக்குள் நுழைய அனுமதி வழங்கவில்லை. ஆயினும், பின்னர் அன்னாருக்கு மதீனாவுக்குள் நுழைய அனுமதி கிடைத்ததும், அன்னார் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் அந்த செயலுக்காக மன்னிப்புக் கேட்டார்கள்.

ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) அவர்களுக்கு இந்தத் தோல்வி ஏற்பட்ட பிறகும் கூட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உறுதிப்பாடு மற்றும் தைரியம் சற்றும் மாறுபடவில்லை. ஹஸ்ரத் இக்ரிமா மற்றும் ஸுல் கலாஃ ஆகியோர் இஸ்லாமியப் படைகளை ரோமானியர்களின் பிடியில் இருந்து காப்பாற்றி சிரியாவின் எல்லைக்குத் திரும்ப கொண்டு வந்து இருக்கிறார்கள். அங்கு உதவிக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்ற தகவல் கிடைத்தபோது, ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் ஒரு நொடிப் பொழுது கூட வீணடிக்காமல் உதவிப்படையை அனுப்புவதற்கான ஏற்பாட்டைச் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் இதற்காக நான்கு பெரிய படைகளைத் தயார் செய்தார்கள். அவற்றை சிரியாவின் பல்வேறு பகுதிகளை நோக்கி அனுப்பி வைத்தார்கள். அவற்றின் விவரம் பின்வருமாறு:

முதல் படை யஸீத் பின் அபீ ஸுஃப்யானுடையதாக இருந்தது. அவர், ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்களின் சகோதரர் ஆவார். அபூ ஸுஃப்யான் குடும்பத்தில் சிறந்த மனிதராக இருந்தார். உதவிப் படையாக அனுப்பப்பட்ட நான்கு படைகளில் இது முதல் படையாக இருந்தது. இது சிரியாவை நோக்கி முன்னேறியது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்தப் படையின் தலைவராக ஹஸ்ரத் யஸீத் பின் அபீ ஸுஃப்யான் அவர்களை நியமித்தார்கள். தமாஸ்கஸ் சென்றடைந்து அதை வெற்றி காண்பதும், இதர மூன்று படைகளுக்கும் தேவையின்போது, உதவி செய்வதும் அவர்களது பொறுப்பாக இருந்தது.

ஆரம்பத்தில் அந்தப் படையின் எண்ணிக்கை மூவாயிரமாக இருந்தது. பின்னர், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூடுதலாக உதவிப்படையை அனுப்பினார்கள். அதனால் அவர்களின் எண்ணிக்கை சுமார் ஏழாயிரம் ஆகிவிட்டது. ஹஸ்ரத் யஸீத் பின் அபீ ஸுஃப்யான் அவர்களின் இந்தப் படையில் மக்கத்து மக்களில் ஸுஹைல் பின் அம்ர் அவர்களும், அன்னாரைப் போன்ற இன்னும் கண்ணியம் மிக்க மக்களும் இருந்தார்கள்.

ஹஸ்ரத் ஸுஹைல் பின் அம்ர் (ரலி) அவர்கள் அறிவீனமான காலகட்டத்தில் குரைஷியர்களின் தலைமைத்துவம் பெற்ற மற்றும் புத்திசாலியான தலைவர்களில் ஒருவராக இருந்தார்கள். ஹுதைபியா உடன்படிக்கையின் போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் உடன்படிக்கை செய்தவாறு, அன்னார் மக்கத்து நிராகரிப்பாளர்களின் பிரதிநிதித்துவம் வகித்திருந்தார்கள். அன்னார் மக்கா வெற்றியின்போது முஸ்லிம் ஆனார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் யஸீத் பின் அபீ ஸுஃப்யானுக்காகக் கொடியைக் கட்டியபோது, ஹஸ்ரத் ரபீஆ பின் ஆமிர் (ரலி) அவர்களை அழைத்தார்கள். அவர்களுக்காகவும் ஒரு கொடியைக் கட்டினார்கள். அன்னாரிடம், நீங்கள் யஸீத் பின் அபீ ஸுஃப்யானுடன் செல்ல வேண்டும். அவருக்கு மாறு செய்யவோ, அவரை எதிர்க்கவோ கூடாது என்று கூறினார்கள்.

பின்னர், அன்னார் ஹஸ்ரத் யஸீத்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

பின் அபீ ஸுஃப்யான் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்:

நீர் உமது படையின் முன்பக்கத்தை கண்காணிக்கும் பொறுப்பை ரபீஆ பின் ஆமிரிடம் ஒப்படைப்பதைப் பொருத்தமாகக் கண்டீர் என்றால், நிச்சயம் அவ்வாறே செய்வீராக. அவர் அரேபியாவின் சிறந்த குதிரை வீரர்களில் ஒருவராகவும், உங்களுடைய சமுதாயத்தின் நன்மக்களில் ஒருவராகவும் இருக்கின்றார். அவர் அல்லாஹ்வின் நல்லடியார்களில் ஒருவராவார் என்று நானும் நம்பிக்கை வைக்கிறேன். இதைக் கேட்ட ஹஸ்ரத் யஸீத் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

அவர்களைப் பற்றிய தங்களது நல்லெண்ணமும் அவர்கள் மீது தாங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையும் எனது உள்ளத்தில் அவர்கள் மீதான நேசத்தை மேலும் அதிகரிக்கச் செய்துவிட்டது. பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாருடன் நடந்து செல்ல ஆரம்பித்தார்கள். அப்பொழுது யஸீத் கூறினார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் கலீஃபா அவர்களே! ஒன்று தாங்களும் சவாரியில் ஏறிக் கொள்ளுங்கள் அல்லது எனக்கும் தங்களுடன் நடந்து வருவதற்கு அனுமதி நல்குங்கள். ஏனெனில், நான் சவாரி மீது அமர்ந்து தாங்கள் நடந்து வருவதை நான் விரும்பவில்லை. இதைக் கேட்ட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நானும் சவாரி மீது ஏறமாட்டேன். நீரும் சவாரியில் இருந்து கீழே இறங்கக் கூடாது. நான் எனது இந்தப் பாதங்களை அல்லாஹ்வின் வழியில் எழுவதாகக் கருதுகிறேன்.

பிறகு, அன்னார் ஹஸ்ரத் யஸீத் (ரலி) அவர்களுக்கு அறிவுரை வழங்கியவாறு கூறினார்கள்:

**யஸீதே! நான் உமக்கு இறையச்சத்தை மேற்கொள்ளுமாறும், அவனுக்கு கட்டுப்படுமாறும் அவனுக்காகத் தியாகம் செய்யுமாறும் அவனுக்கு அஞ்சிக் கொண்டே இருக்குமாறும் வலியுறுத்திக் கூறுகிறேன்.** எதிரியோடு நீர் மோதும்போது, அல்லாஹ் உமக்கு வெற்றியை வழங்குவானாக! ஆக, **நீர் நம்பிக்கை துரோகம் செய்யாமலிருப்பீராக! இறந்து போன மக்களை உருசிதைக்காமல் இருப்பீராக! வாக்குறுதி மீறாமல் இருப்பீராக! எந்த சிறு பிள்ளையையும் கொலை செய்யாமல் இருப்பீராக! மேலும், எந்த முதியவரையும், பெண்களையும் கொலை செய்யாமல் இருப்பீராக!**

**பேரீத்தம் மரத்தை எரிக்காமல் இருப்பீராக! அவற்றை அழித்து நாசமாக்காமல் இருப்பீராக! கனி தரும் எந்த மரத்தையும் வெட்டாமல் இருப்பீராக! உண்பதற்காக அன்றி தேவையில்லாமல் விலங்குகளை நீர் அறுக்கக் கூடாது; கொல்லக் கூடாது.** அல்லாஹ்வுக்காக தம்மை தேவலாயங்களில் அர்ப்பணித்து வைத்திருக்கும் சில மக்களை நீர் கடந்து செல்வீர். எனவே, நீர் அவர்களையும், எதற்காக தம்மை அர்ப்பணித்து வைத்திருப்பார்களோ அதையும் விட்டு விடுவீராக! அதாவது, துறவிகள், பாதிரிமார்களை எதுவும் செய்யக் கூடாது.

ஷைத்தான் தலையின் நடுபக்கத்திலிருந்து முடியை மழிக்கச் செய்திருக்கும் சிலரையும் நீர் காண்பீர். கௌதாரி முட்டையிடுவதற்காக நிலத்தில் குழி தோண்டியது போன்று அவர்களின் தலைகளின் நடுப்பகுதி இருக்கும். ஓர் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது. இந்தச் சொற்கள் வருகின்றன. தமது தலையின் முடியை நடுவிலிருந்து மழித்து நாலாப்புறமும் கட்டுப் போட்டது போன்று முடியை விட்டிருக்கும் சிலரும் உங்களுக்குக் காணக் கிடைப்பார்கள். எனவே, நீங்கள் அவர்களின் தலைகளின் மழிக்கப்பட்ட பகுதிகளில் வாள் வீசுங்கள். அந்த மக்களைக் கொல்வதற்கான கட்டளை உள்ளது. அவர்களைப் பற்றி பல்வேறு அறிவிப்புகள் உள்ளன. கூறப்படுகிறது.

இது கிறித்தவர்களின் ஒரு குழுவாக இருந்தது. அவர்கள் துறவிகளாக ஒன்றும் இருக்கவில்லை. ஆனால், மதத் தலைவர்களாக இருந்தனர். அவர்கள் முஸ்லிமகளுக்கு எதிராக போர் புரிய தூண்டி விட்டு வந்தார்கள். எனவே தான் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

தேவாலயங்களுக்குள் இருப்பவர்களை ஒன்றும் செய்யக் கூடாது. ஆனால், போருக்காகத் தூண்டி விடக்கூடிய மேலும், முஸ்லிம்களுடன் போர் புரியக் கூடிய இத்தகைய மக்கள் மற்றும் அவர்களுக்குப் பின்னால் செல்லக்கூடியவர்களுடன் எந்நிலையிலும் போர் புரிய வேண்டும். காரணம், அவர்கள் போர் புரியக்கூடியவர்களும், போர் புரிய தூண்டக்கூடியவர்களும் ஆவார்கள். எதுவரை கூறியிருக்கின்றார்கள் என்றால், அவர்கள் இஸ்லாத்தின் பால் சாய்ந்து விடும்வரை அல்லது இயலாமற்போய் ஜிஸ்யா வரி செலுத்தும் வரை அவர்களுடன் போர் புரிய வேண்டும்.

எவர் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதருக்குக் கட்டுப்படுகிறாரோ அல்லாஹ் மறைவிலிருந்து அவருக்கு உதவி புரிகிறான். நான் உங்களுக்கு ஸலாம் கூறுகிறேன். உங்களை அல்லாஹ்வின் பொறுப்பில் விடுகிறேன்.

மற்றோர் அறிவிப்பில் இவை போகவும் இன்னும் சில வழிகாட்டல்கள் பற்றியும் குறிப்பு கிடைக்கிறது. ஆக, எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் யஸீத் பின் அபீ ஸுஃப்யானிடம் கூறினார்கள்: **நான் உம்மை சோதித்துப் பார்ப்பதற்காகவும், ஆய்வு செய்துப் பார்ப்பதற்காகவும், உம்மை வெளியே அனுப்பி உமக்குத் தர்பிய்யத் வழங்குவதற்காகவும், உம்மை ஆளுநராக நியமித்துள்ளேன். நீர் உமது கடமைகளை அழகாகவும், சிறப்பாகவும் நிறைவேற்றினால், உம்மை மீண்டும் உமது பணியில் நியமனம் செய்வேன். உமக்கு மேற்கொண்டு முன்னேற்றம் அளிப்பேன். நீர் குறை வைத்தால் உம்மை பணிநீக்கம் செய்துவிடுவேன்.**

**அல்லாஹ்வுக்கான தக்வாவைக் கட்டாயமாக்கிக் கொள்வீராக! அவன் உமது புறத்தைப் பார்ப்பதுபோன்றே அகத்தையும் பார்க்கின்றான்.** கூறினார்கள்:

**அல்லாஹ்வுடனான நட்பிற்கான உரிமையை எல்லாரையும் விட அதிகமாக செலுத்தக்கூடியவரே மக்களில் அல்லாஹ்வுக்கு மிகவும் நெருக்கமானவர் ஆவார்.** தனது நற்செயல் மூலமாக எல்லாரையும் விட அதிகமாக அவனது நெருக்கத்தைப் பெறக்கூடியவரே மக்களில் அல்லாஹ்வுக்கு மிகவும் நெருக்கமானவர் ஆவார். நான் ஹஸ்ரத் காலித் பின் சயீத் (ரலி) இடத்தில் உம்மை நியமித்திருக்கிறேன். **அறிவீனம் மற்றும் காழ்ப்புணர்ச்சியை விட்டும் தவிர்ந்திருப்பீராக. அல்லாஹ்வுக்கு இந்த விஷயங்களையும், இவ்வாறு செய்பவர்களையும் அறவே பிடிக்காது.**

நீர் உமது படையைச் சென்றடையும்போது, அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வீராக அவர்களை நன்மையுடன் அணுகுவீராக! அவர்களுக்கு நன்மைக்கான வாக்குறுதி அளிப்பீராக! அவர்களுக்கு அறிவுரை கூறவேண்டும் என்றால், சுருக்கமாக கூறுவீராக! ஏனெனில், **அதிகமாக உரையாடுவது பல விஷயங்களை மறக்கடித்துவிடுகிறது. நீர் உமது நஃப்ஸை சரியாக வைப்பீராக! மக்கள் உமக்காக சரியாகிவிடுவார்கள்.**

**தம்மைத் தாமே சரியாக்கி வைத்திருந்தால், தலைவர்கள் சரியாக்கி வைத்திருந்தால், மக்கள் தாமாகவே சரியாகி விடுவார்கள்.** தொழுகைகளை

அவற்றின் நேரத்தில் ருகூ மற்றும் சஜ்தாக்களை முழுமைபடுத்தியவாறு நிறைவேற்றுவீராக! அவற்றில் அழுது மன்றாடுதலை முழுமையாகப் பேணுவீராக! எதிரியின் தூதுவர் உம்மிடம் வரும்போது அவருக்குக் கண்ணியம் அளிப்பீராக! தூதுவர் வந்தால் அவருக்கு கண்ணியம் அளிக்க வேண்டும். அவர்களை மிகக் குறைவாகவே இருக்க விட வேண்டும். அவர்கள் உங்களது படையை விட்டு விரைவாகச் சென்றுவிட வேண்டும். அப்போதுதான் அவர்களால், உங்களது படையைப் பற்றி எதுவும் தெரிந்து கொள்ள முடியாது.

இதுவும் ஒரு ஹிக்மத்தான செயல். தூதுவர்கள் வந்தால், அவர்களைக் குறைந்தநேரம் தங்க வையுங்கள். விரைவாக அனுப்பி விடுங்கள். உங்கள் செல்வங்களைப் பற்றி அவர்கள் தகவல் அறிந்து கொள்ள விட்டுவிடாதீர்கள். இல்லையென்றால், உங்களுடைய சீர்கேடுகள் பற்றி அவர்களுக்குத் தெரிந்துவிடும். அவர்கள் உங்களது தகவல்களை சேகரித்துக் கொள்வார்கள். அவர்களை உங்களது படை சூழலுக்கு நடுவில் வைத்திருங்கள். உமது மக்களை அவர்களுடன் உரையாட விடாதீர். நீர் அவர்களுடன் உரையாடும்போது, உமது ரகசியத்தை வெளிப்படுத்தாதிருப்பீராக. இல்லையென்றால், உங்களது விவகாரங்கள் சீர்கெட்டுப்போய் விடும்.

**நீர் யாரிடமிருந்தாவது ஆலோசனை பெறவேண்டும் என்றால், உண்மை விஷயத்தைக் கூறுவீராக! அப்போதுதான் சரியான ஆலோசனை கிடைக்கும். ஆலோசகரிடம் உமது செய்தியை மறைக்காதிருப்பீராக! இல்லையென்றால், உமது காரணத்தினாலேயே உமக்கு இழப்பு ஏற்பட்டுவிடும்.**

இதுவும் ஓர் அடிப்படை விதியாகும். யாரிடமிருந்து ஆலோசனை பெற வேண்டுமோ அவருக்கு முழு விவரத்தையும் கூற வேண்டி உள்ளது. அப்போதுதான் அவரால் சரியான ஆலோசனை வழங்க முடியும். மேலும் குறைந்தபட்ச இழப்பு ஏற்படும். இரவு நேரத்தில் உமது தோழர்களுடன் உரையாடுவீராக! உமக்குப் பல செய்திகள் கிடைத்துவிடும். மேலும் இரவில் தகவல் சேகரிப்பீராக! ரகசியமான விஷயங்கள் உமக்கு வெளிப்பட்டுவிடும்.

பாதுகாப்புப் படையில் அதிகம் பேரை வைப்பீராக! அவர்களை உமது படைகளில் பரப்பி விடுவீராக! **பெரும்பாலும் தகவல் கொடுக்காமல் திடீரென்று அவர்களின் காவல் நிலையங்களைப் பார்வையிடுவீராக! எவரைத் தமது பாதுகாப்பு இடத்தில் கவனமற்றவராகக் காண்பீரோ அவரை நன்றாக தண்டிப்பீராக தண்டனை வழங்கும்போது, வரம்பு மீறாமல் இருப்பீராக!** இரவில் அவர்களுக்கான பணி முறைகளை நிர்ணயிப்பீராக! இரவின் முதல் பகுதியின் முறைறை இரவின் கடைசிப் பகுதியை விட அதிகமாக வைப்பீராக ஏனெனில், பகலுக்கு அருகில் இருப்பதனால் இந்த முறை மிகவும் எளிதானதாக இருக்கிறது.

அதாவது, இரவின் ஆரம்பத்தில் பணி நேரத்தை அதிகமாக வைப்பீராக! ஏனெனில், அதில் விழித்திருப்பது எளிமையான விஷயம். இரவின் கடைசிப் பகுதி பணி நேரம் குறைவாக இருக்கட்டும்.

**தண்டனைக்குரியவரைத் தண்டிப்பதற்கு அஞ்சாதீர்! அதில் மென்மையாக நடந்து கொள்ளாதீர்! தண்டனை வழங்குவதில் அவசரப்படாதீர்! முற்றிலும் கண்டும் காணாமலும் விட்டுவிடாதீர்! பிறகு, கூறினார்கள்: உங்கள் படையைக் குறித்து அவர்கள் சீர்கெடும் வண்ணம் கவனமற்றவராக இருக்காதீர்! அவர்களை உளவறிந்து அவர்களை இழிவுபடுத்தாதீர். அவர்களின் ரகசியங்களை மக்களுக்குத் தெரியப்படுத்தாதீர்! அவர்களின் புறத்தையே போதுமானதாகக் கருதுவீராக! வீணாண மக்களுடன் அமராதீர்! உண்மையான மற்றும் நன்றியுணர்வுள்ள மக்களுடன் அமர்வீராக! எதிரியுடன் மோதும்போது, உறுதியாக நிலைத்து நிற்பீராக! கோழைத்தனம் காட்டாதீர்! இல்லையென்றால், மக்களும் கோழைகள் ஆகிவிடுவார்கள்.**

போர்ச் செல்வத்தில் துரோகம் செய்வதிலிருந்து தவிர்ந்திருப்பீராக! அது தேவையுடைமைக்கு அருகில் கொண்டு செல்கிறது. வெற்றி மற்றும் உதவியைத் தடுக்கிறது. தம்மை தேவாலயங்களில் அர்ப்பணித்து வைத்திருக்கும் மக்களை நீர் காண்பீர் நீர் அவர்களை,அவர்கள் எந்தப் பணியில் தம்மை ஆழ்த்தி வைத்திருப்பார்களோ அதில் விட்டுவிடுவீராக!

ஆக, இது ஒரு செயல் திட்டமாகும். இதை ஒவ்வொரு தலைவரும், ஒவ்வொரு பொறுப்பாளரும் பணியாற்றுவதற்காக செயல்படுத்த வேண்டியது அவசியமாகும். இதற்குப் பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் யஸீதின் கையை பிடித்தார்கள். அவருக்கு விடை கொடுத்தவாறு கூறினார்கள்:

நான் முஸ்லிம்களின் கண்ணியத்திற்குரிய மக்களுக்கு அமீராக ஆக்கிய முதல் நபர் நீர் ஆவீர். அவர்கள் குறைவான அந்தஸ்துடைய மக்களும் இல்லை. பலவீனமானவர்களும் இல்லை. தாழ்ந்தவர்களும் இல்லை. மத பயங்கர வாதம் கொண்டவர்களும் இல்லை. எனவே, நீர் அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வீராக! அவர்களை மென்மையாக அணுகுவீராக! அவர்கள் மீது உமது கரங்களைத் தாழ்த்தி வைப்பீராக! முக்கியமான விஷயங்களில் அவர்களுடன் கலந்தாலோசிப்பீராக! சிறந்த முறையில் நடந்து கொள்வீராக! அல்லாஹ் உம்மையும் உம்முடன் இருப்பவர்களையும் நல்ல முறையில் நடந்து கொள்ளக் கூடியவர்களாக ஆக்குவானாக!

பின்னர் அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

கிலாஃபத் பொறுப்பை நிறைவேற்றுவதில் உதவக்கூடியவர்களாக உங்களை ஆக்குவானாக.

பிறகு, ஹஸ்ரத் யஸீத் (ரலி) அவர்கள் தமது படையை அழைத்துக் கொண்டு சிரியாவுக்குப் புறப்பட்டுவிட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒவ்வொரு காலையிலும், மாலையிலும் ஃபஜ்ர் மற்றும் அஸர் தொழுகைக்குப் பிறகு, இந்த துஆவை செய்து வந்தார்கள்:

அல்லாஹ்வே! நீ எங்களைப் படைத்தாய். நாங்கள் ஒன்றுமற்றவர்களாக இருந்தோம். பிறகு, நீ உன் தரப்பிலிருந்து கருணை மற்றும் அருளை இறக்கியவாறு எங்களிடம் ஒரு தூதரை அனுப்பினாய். பிறகு, நீ எங்களுக்கு நேர்வழி வழங்கினாய். நாங்களோ வழிதவறிக் கிடந்தோம். நீ எங்களது உள்ளத்தில் ஈமான் மீதான நேசத்தைப் போட்டுவிட்டாய். நாங்களோ நிராகரிப்பாளர்களாக இருந்தோம். நாங்கள் எண்ணிக்கையில் குறைவானவர்களாக இருந்தோம். நீ எங்களை அதிகரிக்கச் செய்தாய். நாங்கள் சிதறிக் கிடந்தோம். நீ எங்களை ஒன்றிணைத்துவிட்டாய். நாங்கள் பலவீனமானவர்களாக இருந்தோம். பிறகு, நீ எங்களுக்கு ஆற்றல் வழங்கினாய். பிறகு, நீ எங்கள் மீது போரைக் கடமையாக்கினாய். எங்களுக்கு இணைவைப்பாளர்களுடன் அவர்கள் லா இலாஹ இல்லல்லாஹ் என்று சாட்சி கூறும் வரை அல்லது அவர்கள் தமது கைகளால் ஜிஸ்யா வரி செலுத்தும் வரை போர் புரியுமாறு கட்டளையிட்டாய். அவர்கள் இயலாதவர்களாக ஆகிவிட்டிருந்தார்கள். ஒன்று, முஸ்லிம் ஆகிவிட வேண்டும் அல்லது முஸ்லிம் ஆகவில்லை என்றால், ஜிஸ்யா வரி செலுத்த வேண்டும் என்ற

நிலைக்கு வந்திருந்தார்கள்.

இறைவா! உனக்கு இணைவைத்த மற்றும் உன்னைத் தவிர மற்றதை வணக்கத்திற்குரியதாக வழிபட்ட அந்த எதிரியுடன் போர் புரிவதற்குக் கைமாறாக நாங்கள் உனது தன்னிறைவை நாடுகிறோம். அல்லாஹ்வே! உன்னையன்றி வணக்கத்திற்குரியவர் எவரும் இல்லை. அநீதியிழைப்பவர்கள் கூறுவதை விட்டும் உனது கம்பீரம் மிக மேலானது. அல்லாஹ்வே உன்னுடைய இணைவைக்கும் எதிரிகளுக்கு எதிரில் உன்னுடைய முஸ்லிம் அடியார்களுக்கு உதவி புரிவாயாக.

அல்லாஹ்வே! அவர்களுக்கு எளிதாக வெற்றியை வழங்குவாயாக. அவர்களுக்கு முழுமையாக உதவி புரிவாயாக. அவர்களில் துணிச்சல் குறைந்தவர்களை வீரர்களாக ஆக்கிவிடுவாயாக. அவர்களின் பாதங்களை உறுதிப்படுத்துவாயாக. அவர்களின் எதிரிகளை ஆட்டங்காணச் செய்வாயாக அவர்களின் உள்ளத்தில் மதிப்பச்சத்தை ஏற்படுத்திவிடுவாயாக. அவர்களை அழித்து நாசமாக்கிவிடுவாயாக. அவர்களை வேரறுப்பாயாக அவர்களின் வயல்களை அழித்து விடுவாயாக. எங்களை அவர்களுடைய நிலங்கள், வீடுகள், அவர்களின் செல்வங்கள் மற்றும் அவர்களின் அடையாளங்களுக்கு வாரிசுகளாக ஆக்குவாயாக. நீ எங்களுடைய காப்பாளனாகவும், எங்கள் மீது கருணை காட்டுபவனாகவும் ஆகிவிடுவாயாக.

எங்களது விவகாரங்களை சீரமைப்பாயாக. உன்னுடைய அருட்களில் இருந்து பங்கு பெறுவதற்காக எங்களை நன்றி செலுத்தும் மக்களைச் சேர்ந்தவர்களாக ஆக்கி விடுவாயாக. மேலும், நம்பிக்கை கொண்ட மக்கள் நம்பிக்கை கொண்ட பெண்கள் ஆகிய அனைவரையும் அவர்களில் உயிருடன் இருப்பவர்களையும் அவர்களில் மரணித்துவிட்டவர்களையும் மன்னிப்பாயாக.

அல்லாஹ் எங்களையும், உங்களையும் உலகத்திலும், மறுமையிலும் உறுதியான கூற்றுடன் வலுவாக நிற்கக் கூடியவர்களாக ஆக்குவானாக. நிச்சயமாக, அவன் நம்பிக்கை கொண்டவரார்கள் மீது அளவற்ற அருள் புரிபவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனும் ஆவான்.

இரண்டாவது படை ஷுரஹ்பீல் பின் ஹஸனா அவர்களுடையதாக இருந்தது. ஹஸ்ரத் ஷுரஹ்பீல் பின் ஹஸனா (ரலி) அவர்களின் தந்தை பெயர் அப்துல்லாஹ் பின் முதாஃ.தாயார் பெயர் ஹஸனா. அன்னாரின் புனைப் பெயர் அப்துல்லாஹ். ஹஸ்ரத் ஷுரஹ்பீல் அவர்களின் தந்தையார் அன்னாரின் குழந்தைப் பருவத்திலேயே மரணமடைந்துவிட்டார்கள். அன்னார் தமது தாயார் ஹஸனா அவர்களின் பெயரால் ஷுரஹ்பீல் பின் ஹஸனா என்று அழைக்கப்பட்டாரகள்.

ஹஸ்ரத் ஷுரஹ்பீல் (ரலி), ஆரம்பத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களில், ஒருவராக இருந்தார்கள். நான்காவது கிலாஃபத் காலகட்டத்தில் அன்னார் பிரசித்திப் பெற்ற படைத்தளபதிகளில் ஒருவராக இருந்தார்கள். ஹிஜ்ரீ 18 ஆம் ஆண்டில், 68ஆம் வயதில் அன்னார் மரணமடைந்தார்கள். ஹஸ்ரத் ஷுரஹ்பீல் பின் ஹஸனா (ரலி) அவர்களை வழியனுப்பி வைப்பதற்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் யஸீத் பின் அபீ ஸுஃப்யான் (ரலி) அவர்களை வழியனுப்பி வைத்ததிலிருந்து மூன்று நாள்களுக்குப் பிறகுள்ள தேதியை நிர்ணயித்தார்கள். மூன்றாவது நாள் கழிந்ததும், அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஷுரஹ்பீல் (ரலி) அவர்களுக்கு விடை கொடுத்து இவ்வாறு கேட்டார்கள். ஷுரஹ்பீலே நான் ஹஸ்ரத் யஸீத் பின் அபீ ஸுஃப்யானுக்கு வலியுறுத்திக் கூறியவற்றை நீர் கேட்கவில்லையா?

அதற்கு அன்னார் கூறினார்கள்: ஏன் இல்லை? அந்த அறிவுரைகளை நான் கேட்டேன். அப்போது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் உமக்கு அதேபோன்ற அறிவுரையை செய்கிறேன். மேலும், யஸீதுக்கு நான் கூற மறந்த விஷயங்களையும் உமக்கு வலியுறுத்திக் கூறுகிறேன். போர் நாளன்று, உறுதியாக நிலை நிற்கவேண்டும். எதுவரை என்றால், ஒன்று நீர் வெற்றி பெற வேண்டும் அல்லது ஷஹீத் ஆகிவிடவேண்டும் என்று வலியுறுத்துகிறேன். **நோயாளிகளை நலம் விசாரிக்குமாறும், ஜனாஸாவில் கலந்து கொள்ளுமாறும், எந்நிலையிலும் அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூருமாறும் வலியுறுத்திக் கூறுகிறேன்.**

அபூ ஸுஃப்யான் அன்னாரிடம் கூறினார்: யஸீத் இந்தப் பண்புகளில் ஏற்கனவே நிலைத்திருக்கிறார். சிரியா செல்வதற்கு முன்னரே அதில் நிரந்தர தன்மையை மேற்கொண்டிருந்தார். இப்பொழுது அவர் அதை இன்னும் கட்டாயமாக்கிக் கொள்வார். இன்ஷாஅல்லாஹ்.

ஹஸ்ரத் ஷுரஹ்பீல் (ரலி) பதில் அளித்தார்கள்: அல்லாஹ்விடம் உதவி கோருவோம். அல்லாஹ் என்ன நாடுகிறானோ அதுவே நடக்கும். பிறகு, அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் விடை பெற்றார்கள். தமது படையுடன் சிரியாவை நோக்கிப் பயணமானார்கள். ஹஸ்ரத் ஷுரஹ்பீல் (ரலி) அவர்களின் படையின் எண்ணிக்கை மூவாயிரத்திலிருந்து நாலாயிரம் வரை இருந்தது. அன்னார் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு கட்டளையிட்டார்கள்:

தபூக் மற்றும் பல்கா செல்லுங்கள். பிறகு, பஸ்ராவுக்கு செல்லுங்கள். இது கடைசி இலக்காக இருக்கட்டும். பஸ்ரா என்பது சிரியாவின் ஒரு தொன்மையான மற்றும் புகழ்பெற்ற நகரமாகும். ஹஸ்ரத் ஷுரஹ்பீல் (ரலி) பல்காவுக்குப் புறப்பட்டார்கள். குறிப்பிடத் தகுந்த போர் எதுவும் நடக்கவில்லை. பல்கா என்பதும் சிரியாவின் பகுதியில் அமைந்திருக்கிறது. அவர்களின் படை ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்களின் வலப்புறமும், ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் உடைய படையின் இடப்புறமும் சென்றவாறு பல்கா சென்றடைந்து, உள்ளே நுழைந்துவிட்டது. பஸ்ராவுக்குச் சென்று அதை சுற்றி வளைத்துவிட்டார்கள். ஆனால், வெற்றி கிடைக்க முடியவில்லை. காரணம், இது ரோமானியர்களின் பாதுகாப்பான மற்றும் வலுவான தலைமையகங்களில் ஒன்றாக இருந்தது.

மூன்றாவது படை ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்களுடையதாக இருந்தது. ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்களின் பெயர் ஆமிர் பின் அப்தில்லாஹ் ஆகும். அன்னாரின் தந்தைப் பெயர் அப்துல்லாஹ் பின் ஜர்ராஹ். ஹஸ்ரத் அபூஉபைதா அவர்கள் தமது புனைப் பெயரால் பிரசிதிப் பெற்றிருக்கிறார்கள். அன்னாரின் வம்சம் அன்னாரின் தந்தை வழிப் பாட்டனாரான ஜர்ராஹ் அவர்களுடன் இணைக்கப்படுகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது வாழ்நாளில் சுவர்க்கத்திற்கான நற்செய்தி வழங்கிய அந்தப் பத்து சஹாபா பெருமக்களில் அன்னாரும் ஒருவர் ஆவார்கள். அவர்கள் அஷ்ரா முபஷ்ஷரா என்று அழைக்கப்படுகிறார்கள். அன்னார் ஹிஜ்ரி 18ஆம் ஆண்டு மரணமடைந்தார்கள். அப்பொழுது அன்னாருக்கு 58 வயது இருந்தது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சிரியாவுக்கு அனுப்பி வைத்த மூன்றாவது படை, நான் ஏற்கனவே கூறியது போன்று,

அதன் அமீராக ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் இருந்தார்கள். அன்னாரை ஹிம்ஸ் எனும் இடத்திற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அனுப்பி வைத்தார்கள். ஹிம்ஸ் என்பதும் தமாஸ்கஸுக்கு அருகில் சிரியாவின் ஒரு தொன்மையான நகரமாகும். பெரிய நகரமாக இருந்தது.

ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களின் படையின் எண்ணிக்கை ஏழாயிரமாக இருந்தது. ஆனால், ஓர் அறிவிப்பின்படி, அவர்களின் படையின் எண்ணிக்கை மூவாயிரத்தில் இருந்து நான்காயிரம் வரை இருந்தது.

ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள், வழியில் கடந்து சென்றவாறு பல்கா உடைய சிற்றூர் மஆப் எனும் இடத்தைக் கடந்து சென்றார்கள். இதுவொரு நகரம் கிடையாது. மாறாக, கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்த ஒரு சிற்றூர் ஆகும். அங்குள்ள மக்களுடன் அன்னாருக்குப் போர் நடைபெற்றது. ஆனால், பிறகு அந்த மக்கள் அன்னாரிடம் சமாதானத்திற்கான கோரிக்கை வைத்தனர். அதனால், அன்னார் அவர்களுடன் சமாதானம் செய்து கொண்டார்கள்.இது சிரியாவில் நடந்த முதல் சமாதானம் ஆகும்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களுடன் கைஸ் பின் ஹுபைராவையும் அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவரைக் குறித்து ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களுக்கு அறிவுரை வழங்கியவாறு கூறினார்கள்:

உங்களுடன் அரேபியாவின் குதிரை வீரர்களில் ஒரு மாபெரும் கண்ணியமும், அந்தஸ்தும் பெற்ற நபர் இருக்கின்றார். ஜிஹாத் விஷயத்தில் அவரை விட நல்லெண்ணம் கொண்டவர் வேறு யாரும் இருப்பதாக நான் கருதவில்லை. அவருடைய கருத்து, ஆலோசனை, போர் ஆற்றல் ஆகியவற்றின் தேவையற்றவர்களாக முஸ்லிம்கள் இருக்க முடியாது. அவரை உமக்கு அருகில் வைத்துக் கொள்வீராக. அவருடன் மென்மையுடனும், பரிவுடனும் நடந்து கொள்வீராக உங்களுக்கு அவரது தேவையில்லாமல் இல்லை என்பதை உணரச் செய்வீராக இதனால், உமக்கு அவருடைய நன்மையை நாடுதல் கிடைத்துக் கொண்டே இருக்கும்.

எதிரிக்கு எதிரில் அவரது முயற்சிகள் உம்முடன் இருக்கும். ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அங்கிருந்து சென்றுவிட்டார்கள். அப்பொழுது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கைஸ் பின் ஹுபைராவை வரவழைத்துக் கூறினார்கள்: நான் உம்மை சமுதாயத்தின் நம்பகமான நபரான அபூ உபைதாவுடன் அனுப்புகிறேன். அவர்கள் மீது அநீதி இழைக்கப்படாமல் அவர்கள் அதற்குப் பதிலாக அநீதி இழைப்பதில்லை. அவர்களுடன் தீய முறையில் நடந்து கொள்ளப்பட்டால், அவர்கள் மன்னித்து விடுவார்கள். அவர்களுடனான தொடர்பு முறித்துக் கொள்ளப்பட்டால், அவர்கள் அதை இணைப்பதற்கு முயற்சி செய்வார்கள். நம்பிக்கை கொண்டவர்களுடன் மிகவும் கருணையுள்ளவர் ஆவார்கள்.நிராகரிப்பாளர்களுக்கு எதிரில் மிகவும் கடுமையானவர் ஆவார்கள்.

நீர் அவர்களது கட்டளையை மீறாதீர். இவர்கள் உமக்கு நன்மைக்கான கட்டளையையே வழங்குவார்கள். அவர்கள் உமது பேச்சைக் கேட்குமாறு நான் அவர்களுக்கு கட்டளையிட்டுள்ளேன். எனவே, நீர் இறையச்சத்தை மேற்கொண்டவாறு அவர்களுக்கு ஆலோசனை வழங்குவீராக. நீர் இணைவைப்பு மற்றும் அறிவீனமான காலத்தில் போர் அனுபவம் பெற்ற தலைவராக இருந்து வந்துள்ளீர் என்பதை நாங்கள் கேள்விப்பட்டுள்ளோம். அறிவீனமான காலத்தில் பாவமும், நிராகரிப்பும் காணப்பட்டு வந்தது. எனவே, நீர் உமது ஆற்றல் மற்றும் வீரத்தை இஸ்லாத்தின் நிலையில் நிராகரிப்பாளர்களுக்கு எதிராகவும், அல்லாஹ்வுக்கு இணை வைத்த மக்களுக்கு எதிராகவும் கொண்டு வருவீராக. இதில் அல்லாஹ் உமக்குப் பெரும் நற்கூலியையும், முஸ்லிம்களுக்கு கண்ணியம் மற்றும் வெற்றியையும் வைத்துள்ளான்.

இந்த அறிவுரையைக் கேட்ட கைஸ் பின் ஹுபைரா பணிவுடன் கூறினார்கள்: தாங்கள் உயிருடன் இருந்தால், நானும் உயிருடன் இருந்தால் தங்களுக்கு என்னைப் பற்றி முஸ்லிம்களைப் பாதுகாத்தல் மற்றும் இணைவைப்பாளர்களை எதிர்த்தல் பற்றி எத்தகைய செய்திகள் கிடைக்கும் என்றால், அவை தங்களுக்குப் பிடித்தவையாக இருக்கும். தங்களை மகிழ்வித்து விடும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:உம்மைப் போன்ற நபர் தான் இவ்வாறு செய்ய முடியும்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஜாபியாவில் இரு படைத் தளபதிகளுடன் அவர்கள் ஒற்றையாகப் போரிட்டது மற்றும் அவர்கள் இருவரையும் மரணக் குழிக்குள் இறக்கியது பற்றியும் தகவல் கிடைத்தபோது, அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

கைஸ் மெய்பித்துக் காட்டியிருக்கின்றார்.தனது வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டார்.

இந்த நற்குறிப்பு எஞ்சியிருக்கிறது. இனி தொடர்ந்து கொண்டே இருக்கும். இப்பொழுது நான் ஒரு ஷஹீத் பற்றியும் கூற விரும்புகிறேன்.

நம்முடைய ஒரு ஷஹீத் நஸீர் அஹ்மது சாஹிப் ஆவார்கள். அன்னார் அப்துல் கனீ சாஹிப் அவர்களின் மகனாவார்கள். ரப்வாவில் கிழக்கு தாருர் ரஹ்மத்தில் வசித்து வந்தார்கள். ஆகஸ்ட் 12 அன்று, அஹ்மதிய்யத்தின் எதிரி ஒருவன் கத்தியால் குத்தி அன்னாரை ஷஹீதாக்கிவிட்டான். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

(கிடைக்கப்பெற்ற) விவரங்களின் அடிப்படையில் நஸீர் அஹ்மது சாஹிப் அவர்கள் பேருந்து நிறுத்தத்தில் செய்தித்தாள் விற்கக்கூடிய தமது நண்பருடன் இருக்கும்பொழுது, ஒரு மதவெறி பிடித்த ஹாஃபிழ் ஷஹ்ஸாத் ஹஸன் அங்கு வந்துவிட்டான். நீங்கள் அஹ்மதியா? என்று அன்னாரிடம் அவன் கேட்டான். அதற்கு நஸீர் அஹ்மத் சாஹிப் அவர்கள், நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சார்ந்தவன் என்று பதிலளித்தார்கள். அதற்கு, மேற்கூறப்பட்ட நபர் ஜமாஅத்திற்கு எதிராக முழக்கம் இடுமாறு கூறினான். அதை மறுத்தபோது தன்னுடைய பையிலிருந்து கத்தியை எடுத்து முழக்கம் இட்டவாறு, நஸீர் அஹ்மத் சாஹிப் அவர்களைக் குத்தினான். பலமுறை குத்தினான். சில நொடிகளில் எந்த அளவிற்கு தாக்குதல் நடத்தினான் என்றால், அது உயிரைப் பறித்துவிட்டது.

எவ்வாறு இருப்பினும், கத்தியினால் பலமுறை தாக்கியதை தாங்க முடியாமல், அன்னார் ஷஹீதாகிவிட்டார்கள். ஷஹாதத்தின்போது அன்னாருடைய வயது 62 ஆக இருந்தது. சம்பவத்திற்குப் பிறகு, கொலைகாரன் தன்னுடைய வாக்குமூலத்தில் எனக்கு இந்த காரியத்தில் எந்த வெட்கமும் இல்லை. இனியும் சந்தர்ப்பம் கிடைத்தால் இந்தக் காரியத்தை செய்வதிலிருந்து நான் பின்வாங்க மாட்டேன் என்று கூறினான். இந்த முழு சம்பவமும் ஓரிரு நிமிடத்திற்குள் நடந்தது. இன்னும் சொல்வதென்றால், ஒரு நிமிடத்திற்குள்ளேயே நடந்தது.

இரண்டு, இரண்டரை, மூன்று நிமிடத்திற்குள் அன்னார் மருத்துமனையில் கொண்டு சேர்க்கப்பட்டதாகக் கூறுகிறார்கள். ஆனால், எவ்வாறு இருப்பினும் அல்லாஹ்வின் நாட்டம் இதுவாகவே இருந்தது. செய்யப்பட்ட தாக்குதல்கள் அனைத்துமே உயிரைப் பறித்தன.

அன்னார் ஷஹீதாகிவிட்டார்கள்.

ஷஹீத் மர்ஹூம் அவர்களின் குடும்பத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத் ஷஹீத் மர்ஹூம் அவர்களுடைய தந்தை வழிப் பாட்டனாரான சியோல்கோட் மாவட்டத்தின் ராய்ப்பூரைச் சேர்ந்த மதிப்பிற்குரிய ஃபிரோஸுதீன் சாஹிப் அவர்கள் மூலமாக வந்தது. அன்னார் 1935ஆம் ஆண்டு இரண்டாவது கிலாஃபத்தின் காலகட்டத்தில் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்தார்கள். அன்னார் ஆரம்ப கல்விக்குப் பிறகு, மேற்கொண்டு எதுவும் படிக்கவில்லை. தமது பூர்வீகத் தொழிலான விவசாயத்தில் ஈடுபட்டார்கள்.

பத்து வருடங்களுக்கு முன்பாக அன்னார் சிறிது காலம் வெளியே மலேசியா போன்ற நாடுகளிலும் இருந்தார்கள். பணிபுரிந்தார்கள். பிறகு பாகிஸ்தானுக்கு வந்துவிட்டார்கள். பத்து வருடங்களுக்கு முன்பாக அன்னார் சியால்கோட் மாவட்டத்தின் ராய்ப்பூரிலிருந்து ரப்வாவுக்கு இடம் பெயர்ந்தார்கள். தற்போது ஓய்வில் இருந்தார்கள். எந்தப் பணியும் செய்யவில்லை. இருதய நோயாளியாகவும் இருந்தார்கள். அதிகப்படியான நேரத்தை பகுதி அளவிலான ஜமாஅத் தொண்டுகளில் கழித்து வந்தார்கள்.

தற்போதும் மஜ்லிஸ் அன்சாருல்லாஹ்வில் அன்சாருல்லாஹ் செயலாளராகவும், சந்தா வசூலிப்பவராகவும் தொண்டாற்றும் நற்பேறை பெற்றிருந்தார்கள். எண்ணற்ற நற்பண்புகளுக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். பகுதியில் எல்லாருக்கும் உதவுவதும், குறிப்பாக அனாதைகள் மற்றும் ஏழைகளின் உதவிக்காக எந்நேரமும் தயாராக இருந்தார்கள். குறிப்பாக, பள்ளிவாயிலின் தூய்மையையும் கருத்தில் கொண்டிருந்தார்கள்.

மிகவும் நேர்மையான, கடினமாக உழைக்கக் கூடிய, எல்லாருடனும் நெருங்கிப் பழகுகின்ற மற்றும் வீரம் மிக்க நபராக இருந்தார்கள். அன்னாரின் காலில் அடிபட்ட காரணத்தினால், எலும்பு முறிவு ஏற்பட்டு இருந்தது. அதன் காரணமாக நடப்பதிலும் கஷ்டம் இருந்தது.ஆனால், அவ்வாறு இருந்தும் கூட இரவில் ஜமாஅத் ரீதியாக டியூட்டி அல்லது காவலுக்காக அழைக்கப்பட்டால் உடனே ஆஜராகிவிடுவார்கள்.

குத்பா கேட்பதற்கான முறையான ஏற்பாடு இருந்தது. தொழுகைகளை நிறைவேற்றுவதைக் குறிப்பாக பேணி வந்தார்கள். தமது பகுதியில் ஆய்வும் செய்வார்கள். அன்னாருக்கு கிலாஃபத்தின் மீது அளவு கடந்த நேசம் இருந்தது. தினமும் ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு ஒரு மணிநேரம் கைபேசியில் திலாவத் கேட்பது அன்னாருடைய தினசரி வழக்கமாக இருந்தது. கிட்டத்தட்ட தினமுமே துஆவிற்காக கப்ருஸ்தான் சென்று வந்தார்கள். பஹஷ்தி மக்பராவுக்குச் சென்று வந்தார்கள்.

பகுதியின் தலைவர் கூறுகிறார்கள்: எப்போது ஜமாஅத் பணிக்காக தேவை ஏற்பட்டாலும், ஷஹீத் மர்ஹூம் அவர்கள் உடனடியாக ஆஜராகிவிடுவார்கள். அன்னார் ஒருபோதும் மறுத்தது கிடையாது.

மர்ஹூமின் மகள் முபாரகா சாஹிபா கூறுகிறார்கள்: ஷஹாதத்துக்கு சில நாட்கள் முன்பு அன்னார் கனவு கண்டார்கள். மக்கள் கூட்டமாக இருக்கின்றார்கள். துக்க சூழலாக இருக்கிறது.

அதனால் சதகாவும் கொடுக்கப்பட்டது. ஷஹீத் மர்ஹூம் கடந்த சில காலமாக என்னுடைய நேரம் குறைவாகவே எஞ்சியிருப்பதாக எனக்கு தெரிகிறது என்று அன்னார் சுயமே மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தி வந்தார்கள்.

அன்னாருடைய துணைவியார் பர்வீன் அக்தர் சாஹிபா அவர்கள் மட்டுமின்றி, மூன்று மகள்கள் மர்ஹூமுடைய நினைவாக உள்ளனர். அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் பொறுமை மற்றும் மனதைரியத்தை வழங்குவானாக.

அன்னாருடைய சகோதரர் அக்தர் சாஹிப் கூறுகிறார்கள்:

உலக படிப்பிலும், ஜமாஅத்தைப் பற்றிய விஷயங்களிலும் மர்ஹூம் அதிகம் அறிந்தவராக இருக்கவில்லை. ஆனால், சிறுவயதிலிருந்தே ஜமாஅத்திற்காக அதிக தன்மானம் கொண்டிருந்தார். கிலாஃபத்துடன் அளவற்ற அன்பு கொண்டிருந்தார். எளிமையான உள்ளம் கொண்ட, தன்னலமற்ற மனிதராக இருந்தார். மற்றவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதைக் கண்டு மகிழ்ந்து வந்தார். பெருநாள் சந்தர்ப்பங்களில் லாஹூரில் இருந்து வீட்டுக்கு வரும்பொழுது, நிறைய உணவுப் பொருட்களை வாங்கி வருவார். எப்பொழுதும் நல்ல, சிறந்த புதிய ஆடைகளைத் தமக்காகத் தைத்து வாங்கி வருவார். சகோதரர் கூறுகிறார்:

பெருநாளன்று மட்டும் அந்த ஆடையை அணிந்த பிறகு, நான் வாழ்வை அர்ப்பணித்தவன் என்ற காரணத்தால், அந்த ஆடையை எனக்குத் தந்துவிடுவார். என்னுடைய பழைய ஆடையை வாங்கிக் கொள்வார்.

மர்ஹூமுடைய சகோதரர் மகன் கூறுகிறார்: ஜமாஅத்தில் எவருக்காவது உதவி தேவைப்படலாம். phone அருகில் இல்லை என்றால், பிறகு எப்படி தொடர்பு கொள்வார்கள்? என்று எப்பொழுதும் தம்மிடம் phone வைத்திருப்பார்கள். இரவு நேரத்தில் phone அடித்தாலும் உடனடியாக எழுந்து ஜமாஅத்தின் தொண்டிற்காக ஆயத்தம் ஆகிவிடுவார்கள்.

ரப்வாவின் மூலை முடுக்குகளிலும் கூட உதவிக்காக செல்ல நேரிட்டால், சென்றுவிடுவார்கள். ரத்த தானம் செய்வதற்கு எப்பொழுதும் ஆயத்தமாக இருப்பார்கள். இவ்வாறு எண்ணற்ற மக்களுடைய உயிரைக் காப்பாற்ற காரணமாக இருந்துள்ளார்கள். இருதய நோயைப் பற்றி அன்னார் ஒருபோதும் கவலைப்பட்டதே இல்லை. அன்னாரைப் பொருத்தவரை, தேவையுடையோருக்கு உதவி செய்வது, நல்லொழுக்க கடமையாக இருந்தது. அன்னார் தமது நோயைக் காட்டிலும் அதற்கு அதிகம் முக்கியத்துவம் அளித்து வந்தார்கள்.

எல்லாம் வல்ல அல்லாஹ் ஷஹீத் மர்ஹூம் அவர்களின் அந்தஸ்தை உயர்த்துவானாக. ஜன்னத்துல் ஃபிர்தவ்ஸில் உயர்ந்த இடத்தை வழங்குவானாக. பின்விட்டுச் சென்றவர்களுக்கும், உதவியாளனாகவும் பாதுகாவலனாகவும் இருப்பானாக. அன்னாருடைய சந்ததிகளுக்கும் அன்னாருடைய நற்செயல்களைத் தொடர்வதற்கான நற்பேறை வழங்குவானாக.

தொழுகைக்குப் பிறகு, நான் அன்னாருடைய ஜனாஸா காயிப் தொழுகையை தொழவைப்பேன். இன்ஷாஅல்லாஹ்.

தமிழாக்கம் :

மவ்லவி. அதாவுல் முக்னீ

* * * * *

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM

JAYGON-WEST BENGAL 97348 44732

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 22 September 2022 Issue No. 38

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## மல்ஃபூஸாத் - முதல் பக்கத் தொடர்ச்சி...

எந்த அளவுக்கு வீழ்ந்து கிடப்பது நிரூபணம் ஆகியுள்ளது என்றால், மற்றவர்கள் ஒரு பக்கம் இருக்கட்டும். தான் எடுத்து வைத்த போதனையின்படி ஹஸ்ரத் மஸீஹால் கூட சுயமே முழுமையாக அமல் செய்து காட்ட முடியவில்லை. அந்த போதனை கூறுவதற்கு மட்டுமே என்பதை அவர் தனது செயல் மூலமாக நிரூபித்து காட்டிவிட்டார். அவ்வாறில்லையென்றால், அவர் கைது செய்யப்படுவதற்கு முன்னரே, சுயமே தம்மை எதிரிகளிடம் ஒப்படைக்காமல் அவர் துஆக்கள் செய்து கொண்டிருப்பதற்கும், வேதனையை வெளிப்படுத்திக் கொண்டிருப்பதற்கும் அவருக்கு என்னதான் அவசியம் இருந்தது?

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 395, காதியான் பதிப்பு 2018)

## தஃப்ஸீரே கபீர் - முதல் பக்கத் தொடர்ச்சி...

மேலும், தமது வெளிப்படையான மார்க்கப் புறக்கணிப்பிற்கு பரிகாரமாக மற்ற மக்களுக்கு நேர்வழி கிடைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். 4) எதிர்காலத்தில் மீண்டும் அவரிடமிருந்து அதுபோன்ற தவறு வெளிப்படக் கூடாது. அவர் இந்த அனைத்து விஷயங்களின் படி அமல் செய்தால் அவருக்கு மன்னிப்பு கிடைத்துவிடும்.

அல்லாஹ் கூறுகின்றான். அதாவது, இந்த அனைத்து பணிகளையும் செய்த பிறகு. உமது இறைவன் அந்த நபரை மன்னித்துவிடுவான்.

இந்த தியாகங்களை செய்த பிறகு, தவ்பாவை ஒப்புக் கொள்வதற்கான கட்டளை இருக்கும்போதும், இஸ்லாம் அநீதியிழைக்கப்படும் நேரத்தில், வெளிப்படையில் (மார்க்கத்தை) நிராகரிப்பிற்கு அனுமதி வழங்கியுள்ளது என்று எழுதுவது கிறித்தவ பாதிரிமார்கள் இஸ்லாத்தின் மீது செய்து வந்துள்ள அநீதிகளில் ஓர் அநீதி ஆகும்.

இதில் கோழைத்தனத்திற்கான போதனை தரப்பட்டுள்ளது என்று இர்திதாத் (மார்க்கப் புறக்கணிப்பு) வசனத்திலிருந்து முடிவுக்கு வரும் மக்கள் இந்த வசனங்களை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அதாவது, எவ்வளவு பெரிய தியாகங்கள் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டுள்ளது என சிந்திக்க வேண்டும். எந்த நபர் இந்த தியாகத்தின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்வாரோ, அவர் சோதனையின் நேரத்தில் கோழைத்தனத்தை ஏன் வெளிப்படுத்தப் போகிறார்? ஏனென்றால், நாட்டை துறக்கும் அளவிற்கு தியாகம் செய்வதற்கும், அல்லாஹ்வின் வழியில் ஜிஹாது செய்வதற்கும், தனது நஃப்ஸை வாழ்நாள் முழுவதும் இந்த பணியில் ஈடுபடுத்திக் கொள்வதற்கும் ஒரு கோழை எப்படி ஆற்றல் பெற்றிருப்பார்?

எவர்களிடம் தற்காலிகமான கவனக்குறைவின் காரணமாக தவறு ஏற்பட்டுவிட்டதோ அல்லது எவர்கள் பின்னர் உண்மையான தவ்பா செய்துவிட்டனரோ அவர்கள் மட்டுமே இந்த பணிகளை செய்வதற்கு நற்பேறு பெறுவார்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் ஒரு முர்தத் மற்றும் நபித்துவ வாதி மீண்டும் முஸ்லிம் ஆனார். அவருடன் அன்னார் (ரலி) அவர்கள் நடந்து கொண்ட முறையே இந்த வசனத்தின் தஃப்ஸீர் ஆகும். அந்த நபரின் பெயர் துலைஹா இப்னு குவைலத் அஸதி ஆகும். அவர் முஸ்லிம்களுக்கு எதிராக சில போர்களில் பங்கு பெற்றிருந்தார். சில காலத்திற்குப் பிறகு, அவர் இஸ்லாத்தில் இணைய விரும்பினார். ஆனால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரை மன்னிக்கவில்லை. ஒரு முறை தற்செயலாக இவ்வாறு ஒரு சம்பவம் நடந்தது. அதாவது, ஷுரஹ்பீல் பின் ஹஸனா (ரலி) அவர்கள் ஒரு போரில் ஒரு நிராகரிப்பின் தலைவருடன் போரிட்டுக் கொண்டிருந்தார்கள். (அந்த சஹாபி வெளிப்படையில் மிகவும் மெலிந்த, ஒல்லியான மற்றும் பலவீனமான நபராக இருந்தார்கள்). அப்போது, வாள் வீச்சுப் போரில் இவரை எதிர்கொள்ள முடியாது என்பதைக் கண்ட அந்தத் தலைவன் வேகமாக முன்னால் சென்று அன்னார் (ரலி) அவர்களின் இடுப்பை பிடித்துவிட்டான். மேலும் கீழேத் தள்ளிவிட்டு அவரது நெஞ்சில் ஏறி அமர்ந்து விட்டான். அவன் அன்னாரை கொலை செய்திருப்பான். அந்நிலையில், துலைஹா பின் குவைலது என்பவர் உள்ளத்தால் ஏற்கனவே முஸ்லிம் ஆகியிருந்தார். ஆனால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரின் தவ்பாவை ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் அதுவரை அவர் நிராகரிப்பாளர்களுடனேயே இணைந்திருந்தார். அவர் இந்தக் காட்சியை கண்ட பிறகு, அவரால் தமது ஈமானை மறைக்க முடியவில்லை. எனவே அவர் முன்னால் சென்று அந்த நிராகரிப்பாளர்களின் தலைவனின் மீது வாளினால் எவ்வாறு தாக்குதல் நடத்தினார் என்றால், அவனது தலை உடலிலிருந்து தனியாகிவிட்டது. மேலும் ஹஸ்ரத் ஷுரஹ்பீல் (ரலி) அவர்கள் உயிர் தப்பிவிட்டார்கள். இந்த சம்பவத்தால் ஏனைய முஸ்லிம்கள் மிகவும் தாக்கத்திற்குள்ளாகினர். எனவே, அவரை மன்னித்து விடுங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் முஸ்லிம்கள் பரிந்துரை செய்தனர். அப்பொழுது, இந்த நபர் தமது எஞ்சிய முழு வாள்நாளையும் ஜிஹாதில் கழிக்க வேண்டும். மேலும் இஸ்லாமிய நாடுகளின் எல்லைகளிலேயே வாழ்க்கையை கழிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் நான் இவரை மன்னிக்கின்றேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஆக, அந்த நபர் எப்போதும் எல்லையிலேயே வசித்து வந்தார். மேலும் நிராகரிப்பாளர்களுடன் போர் புரிந்து கொண்டிருந்தார். இறுதியில், அதே நிலையில் அவர் மரணமடைந்து விட்டார். அந்த நபர் வேண்டுமென்றே மார்க்கப் புறக்கணிப்பை மேற்கொண்டிருந்தாலும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இதே வசனத்தை ஆதாரமாகக் கொண்டு அதற்கு ஒப்பான கட்டளையை அவருக்கு வழங்கினார்கள் என்று தெரிய வருகிறது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4, பக்கம் 256-257,
காதியான் பதிப்பு 2010)

* * * * *   * * * * *

## திருக்குர்ஆனிலிருந்து...


(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய்தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A. Basheer Ahmad (Sec. Waqf-e-Jadid, Melapalayam)

O.A. NIJAM 99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT 99430 30230




All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

**Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad**